
மாலை தீப்பொறி
MALAE THEEPORI

2025 பிப்ரவரி 01-15 தொகுதி 23 இதழ் 12

விலை ரூ: 10 ஆண்டு சந்தா ரூ: 200

# வறியவர்களை கசக்கிப் பிழிந்து, நடுத்தர மக்களை வஞ்சித்து, கோடிஸ்வரர்களை கொழுக்க வைக்கும் பட்ஜெட்!?



செவ்வணக்கம்!

# தோழர் திருநாவுக்கரசுவுக்கு செவ்வஞ்சலி!



இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர், சென்னை பெருநகரக் குழு உறுப்பினர், ஏஐசிசிடியு மாநிலச் செயலாளர் என பல பொறுப்புகளில் செயலாற்றி வந்த தோழர் திருநாவுக்கரசு அவர்கள் சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் தீவிர மருத்துவம் பலனளிக்காத நிலையில் 29.1.2025 அன்று மரணமடைந்தார்.

சிபிஐ எம்எல் கட்சியின் உறுதி மிக்க தோழர். நெருக்கடியான தருணத்தில், மிகுந்த மன உறுதியுடன், கட்சியுடன் நின்று திருவள்ளூர் மாவட்டத்தில் கட்சியை மறு உறுதி செய்தார்.
சென்னை பெருநகர பொறுப்பேற்று துடிப்புடன் செயல்பட்டார்.
புதிய பகுதிகளில் ஏஐசிசிடியு வேலைகளை முனைப்புடன் முன்னெடுத்துச் சென்றார். அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை கூட்டங்களில் தமிழ்நாடு ஏஐசிசிடியுவின் முகமாகச் செயல்பட்டார். சிம்சன் ஆலைத் தொழிலாளியான தோழர் திருநாவுக்கரசு, தொழிற்சங்கத் தலைவராக கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடியாக உழைக்கும், அடித்தட்டு மக்களுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர்.

உடல்நலக் குறைவால் வீட்டில் இருந்த போதும் கூட சந்திக்க வரும் தோழர்களிடம்
அவரது உடல்நலம் பற்றி பேசாமல் கட்சியை விரிவுபடுத்துவது பற்றியே பேசிக்கொண்டிருந்தார்.

கட்சியிடம் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் கட்சியை முன்னெடுத்துச் செல்வது பற்றி மட்டுமே அக்கறை கொண்ட தோழர். எதிர்பாராத தருணத்தில் ஏற்பட்ட தோழர் திருநாவுக்கரசுவின் மரணம் சிபிஐ எம்எல் கட்சிக்கும் புரட்சிகர தொழிற்சங்க இயக்கத்திற்கும் பேரிழப்பாகும்.

தோழரின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.
தோழர் திருநாவுக்கரசுவிற்கு செவ்வஞ்சலி!
தோழர் விட்டுச் சென்ற பணிகளை புரட்சிகர உணர்வுடன் முன்னெடுத்துச் செல்வோம்.

இகக(மாலெ)
மாநிலக்குழு, தமிழ்நாடு

மாலை தீப்பொறி

இருவார இதழ்

*2025 பிப்ரவரி 1 - 15*

*தொகுதி 23 இதழ் 12*

முதன்மை ஆசிரியர்

**சங்கர் .வீ**

ஆசிரியர்

**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு

**பழ. ஆசைத்தம்பி**
**பாலசுந்தரம்**
**அ. சந்திரமோகன்**
**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்

**சொ. இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com

# வேங்கை வயல் தலித்துகளுக்கு நீதி வேண்டும்!

வேங்கைவயல் கொடுங்குற்றம் நடந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மூன்று தலித்துகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசு, பாதிக்கப்பட்டவர்களையே, புகார் கொடுத்தவர்களையே குற்றம் சுமத்தியிருக்கிறது. முத்துராஜா, சுதர்சன், முத்துக்கிருஷ்ணன் இம் மூவரும் சேர்ந்து ஊராட்சித் தலைவரின் கணவரைப் பழி வாங்கும் நோக்குடன் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் குடிக்கும் தண்ணீர்த் தொட்டியில் மலத்தைக் கலந்தார்கள் என்று சிபிஐசிஐடி போலீஸார், மர்மமாகச் சென்று கொண்டிருந்த வழக்கிற்கு முடிவு எழுதியுள்ளார்கள். தங்கள் முடிவுக்கு ஆதரவாக, குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்கள் பேசிக்கொள்வதாக ஆடியோவும் சிரித்துக் கொண்டே அந்த மலத்தை படம் பிடிக்கும் வீடியோவும் காட்டப்படுவது மட்டுமின்றி அவை சமூக வலைதளங்களில் பரப்பப்படுகின்றன. நீதிமன்றத்தின் சான்றாவணங்கள் எப்படி, எதற்காக யாரால் பரப்பப்படுகின்றன? குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டாலும் வழக்கில் தீர்ப்பு வரும் வரை குற்றம் சுமத்தப்பட்ட எவரும் குற்றவாளிகள் அல்லர். குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்கள், தண்ணீர்த் தொட்டியில் மலம் மிதப்பதை வெளியுலகிற்குக் காட்ட வீடியோ எடுத்தோம். அதையே தலைகீழாக மாற்றியுள்ளது போலீஸ் என்கிறார்கள். தாங்கள் செய்யும் குற்றத்தை தாங்களே யாராவது வீடியோ எடுத்துக் கொள்வார்களா? வேங்கை வயல் கிராமம் காவல் துறையால் முற்றுகையிடப்பட்டுள்ளது. வெளியாட்கள், அரசியல் கட்சியினர் அங்கு செல்ல முடியாது. செல்லக் கூடாது. அங்கு குடியிருப்பவர் கூட ஆயிரம் சோதனை, விசாரணைகளுக்குப் பின்புதான் அனுமதிக்கப்படுகிறார்கள். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அங்கு கெடுபிடி இன்னும் அதிகமாகியுள்ளது. வேங்கை வயலில் இறந்த மூதாட்டி ஒருவரின் இறுதிச் சடங்கிற்குச் செல்லக்கூட முடியவில்லை. அடக்கம் செய்வதற்கும் ஏகப்பட்ட கட்டுப்பாடுகள். அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டிருப்பது எதற்காக? இவையெல்லாம் வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. குற்றப்பத்திரிகையை மறுத்து போராட்டம் நடத்துவதற்கு கூட உயர்நீதிமன்றத்தை நாட வேண்டியிருக்கிறது. உயர்நீதிமன்றமோ வேங்கை வயல் பிரச்சனையை அரசியலாக்க வேண்டாமென்று கூறி அரசியல் செய்கிறது.

இடதுசாரிக்கட்சிகள் மட்டுமின்றி, அதிமுக உட்பட எதிர்க்கட்சிகள், பாதிக்கப்பட்டவர்களையே குற்றவாளியாக்கியுள்ளதை கண்டித்துள்ள நிலையில், திமுகவும் தமிழ்நாடு அரசும் அமைதி காப்பது ஏன்? மலம் கலந்த கொடூர குற்றத்தை செய்தவர்கள் தலித்துகள் தான் என்று கூறுகிறதா திமுக அரசு? அரசு அப்படி கூறுமென்றால் இரண்டாண்டுக்குமுன் நடந்த குற்றத்தைவிட இது கொடுங்குற்றமாகும். எனவேதான், சிபிஐ விசாரணை கோரிக்கைகள் எழுகின்றன. நீதிமன்றம், அரசின் குற்றப்பத்திரிகையை நிராகரிக்க வேண்டும். உயர்நீதிமன்ற கண்காணிப்பில் மறுவிசாரணை நடத்த வேண்டும். உண்மை வெளிச்சத்துக்கு வரவேண்டும்.

உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்யாமல் காப்பாற்ற, மூவர் பலிகடா ஆக்கப்பட்டுள்ளார்கள் என்றே பொதுச்சமூகம் குற்றம் சுமத்துகிறது. உண்மைக் குற்றவாளிகளைக் கைது செய்து சிறையிலடைக்க வேண்டும். உடனடியாக வேங்கைவயலில் இருந்து போலீஸ் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

வேங்கைவயல் தலித்துகளுக்கு நீதி வேண்டும், ஜனநாயகம் வேண்டும். இது வேங்கைவயலுக்கான நீதிமட்டுமல்ல. *தமிழ்நாட்டிற்கான நீதி, தமிழ்நாட்டிற்கான ஜனநாயகம்!*

# தமிழ்நாட்டு பொருளாதாரம்:

# அமாவாசையா பவுர்ணமியா?



**பாலசுந்தரம்**

“திமுக ஆட்சிக்கு இன்னும் 13 அமாவாசைதான்” என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சொல்ல, இன்னும் 100 பவுர்னமிகளுக்கு ஸ்டாலின்தான் முதலமைச்சர் என்று அமைச்சர் செந்தில்பாலாஜி கூற 2026க்கான தயாரிப்பில் சூடேறி வருகிறது. யாருக்கு அமாவாசை? யாருக்கு பவுர்னமி என்பது 2026ல் தெரிந்து விடும். ஆனால் தமிழ்நாட்டு பொருளாதாரத்துக்கு அமாவாசையா? பவுர்னமியா என்று பார்ப்பது தமிழ்நாட்டுக்கு அவசியமானது.

பொருளாதாரம் பற்றி திமுக தேர்தல் அறிக்கை?

இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி, மாநில பொருளாதாரத்தை 35 லட்சம் கோடியாக உயர்த்துவது, தனிநபர் வருமானத்தை ஆண்டுக்கு 4 லட்சத்துக்கு மேலாக உயர்த்துவது என்ற ஸ்டாலினின் ஏழு உறுதிமொழி கூறுகிறது. ஏழாண்டுகால பாஜக ஆட்சி, 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் சீரழிந்து போன பொருளாதாரத்தை மீட்டெடுப்பது இலக்காக திமுக தேர்தல் அறிக்கை கூறியிருந்தது. “9 லட்சம் கோடி கடன் சுமையை” ஏற்படுத்திச் சென்று விட்ட அதிமுக அரசை குற்றம் சாட்டிய அறிக்கை, “தமிழ்நாட்டின் பொருளாதார பின்னடைவை மீட்டெடுத்து முன்செல்ல” அறிக்கை உறுதி கூறியது.

இந்த வாக்குறுதியை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் தொடக்கமாக திமுக அரசு, நிதிநிலைமை பற்றி ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டது. 2021, ஆகஸ்ட் 9 ல் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை, மாநிலத்தின் நிதிநிலை பற்றி விரிவான புள்ளிவிவரங்களுடன் “கடந்த 7 ஆண்டுகளின் அதிமுக ஆட்சியின் தவறான கொள்கைகளும் நிதி நிர்வாகமுமே” இந்த பொருளாதார பின்னடைவுக்கு காரணமென்று குற்றம் சாட்டியது. “ இது தேர்தலில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நீர்த்துப்போகச் செய்வதற்கு நியாயம் கற்பிக்கும் முயற்சி அல்ல” என்று கூறிய அப்போதைய நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன், “நிதி நிலைமையை சீர்செய்வதற்கு “கட்டமைப்பு சீர்திருத்தம்” கட்டாயம் என்று முன்மொழிந்திருந்தார்.

ஆட்சிக்கு வந்த கொஞ்ச நாட்களில், இது “திராவிட மாடல்” அரசு என அறிவித்துக்கொண்ட ஸ்டாலின், தமிழ்நாட்டு பொருளாதாரத்தை 2030க்குள் 1 ட்ரில்லியன் (86 லட்சம் கோடி) பொருளாதாரமாக மாற்றுவது “எனது கனவு” என்றும் அறிவித்துக் கொண்டார். (தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்தது ஏறத்தாழ அரை ட்ரில்லியன் மட்டுமே).

எந்தவொரு பொருளாதாரமும் உற்பத்தி, பங்கீடு, நுகர்வு என்ற மூன்று அடிப்படையான கூறுகளைக் கொண்டவை. இந்த மூன்று கூறுகளில் அரசு என்னென்ன செய்யப்போகிறது என்பதைப் பற்றி எந்த அறிவிப்பும் இல்லை. உலக அளவில் அறியப்பட்ட பொருளாதார அறிஞர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருப்பதை மட்டும் சுட்டிக் காட்டி, கட்டமைப்பு சீர்திருத்தம் தேவைப்படுகிறது என்பதை மட்டும் வலியுறுத்தி முடித்துக் கொண்டது வெள்ளை அறிக்கை. இந்த வகையில் அது கருப்பு அறிக்கையாகவே இருந்தது.

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்”!

விவசாயமும் தொழிலும் பொருளாதாரத்தில் அடிப்படையானவை. ஆனால் முதலமைச்சரின் “கனவுப் பொருளாதாரம்” தொழில் வளர்ச்சியை மட்டுமே முதன்மையாக கொண்டிருக்கிறது. தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி எண் 27 தொடங்கி 112 வரை விவசாயம், நீர்மேலாண்மை பற்றி பேசினாலும் “மூன்றில் ஒரு பங்கு மக்கள்” விவசாயம் சார்ந்த தொழிலை தங்கள் வாழ்வாதாரத்துக்காக நம்பியிருந்தாலும் விவசாயத்துக்கு புத்துயிரூட்டும் திட்டங்களை பார்க்க முடியவில்லை. விவசாயிகளிடமிருந்து பாராட்டு பெற்ற விவசாயத்துக்கான ’தனி நிதி நிலை அறிக்கை’ விவசாயத்துக்கு புத்துயிரளிக்கும் திட்டங்களை கண்டுகொள்ளவில்லை. ஒன்றிய மோடி அரசின் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய அரசின் பாராட்டத்தக்க உறுதிப்பாட்டை மாநிலத்தில் விவசாயத்துக்கு புத்துயிரளிக்கும் முயற்சியில் பார்க்க

முடியவில்லை.

கோவில், மடங்கள் நிலத்துக்கும் நில உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டுவருவது, உபரிநிலத்தை தலைமுறை தலைமுறையாக பயிரிடும் ஏழை, சிறு, குறு விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பது எனும் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். குத்தகை விவசாயிகள் பாதுகாப்புச்சட்டத்தை தீவிரமாக செயல்படுத்தி பல லட்சக்கணக்கான விவசாயிகளை கோவில், மடங்கள் கொடுமைகளிலிருந்து பாதுகாக்க வேண்டுமென டெல்டா விவசாயிகள் போராடிவருகின்றனர். இந்த நிலங்களில் குடியிருக்கும் ஏழை, சாமான்ய மக்களுக்கு அவற்றை சொந்தமாக்கும் கோரிக்கையை அரசு கண்டு கொள்ளவில்லை. மாறாக, பல்லாயிரம் கோடி மதிப்புள்ள நிலங்களையும், சொத்துக்களையும் மீட்டு விட்டுவிட்டதாக அரசு சாதனை அறிக்கை வெளியிடுகிறது. கோவில், மடங்களிலிருந்து இந்து அறநிலையத்துறை வெளியேற வேண்டும். நிலங்களையும் சொத்துக்களையும் இந்துக்கள் கைகளில் ஒப்படைக்க வேண்டும் என்று பாஜக-ஆர்எஸ்எஸ்- இந்து முன்னணியினர் கோவில் நிலவுடைமையை பாதுகாக்க மூர்க்கத்தனமாக முயற்சித்து வருகின்றனர். ஆனால் அரசு அமைதி காக்கிறது. நிலச்சீர்திருத்தம் முடிக்கப்பட்டுவிட்டது என்று திட்டக்கமிஷன் துணைத்தலைவர் திரு ஜெயரஞ்சன் கூறிவந்தாலும் மேற்கூறிய உண்மைகளும் விவாதங்களும் அவரது பிரகடனத்தை மறுக்கின்றன. சனாதனத்தை நசுக்க வேண்டுமென்று பேசி 'சபாஷ்' பெற்ற உதயநிதி, ஆதினத்தின் ஆசி பெற்று வருகிறார். டெல்டா நாயகன் ஆட்சி டெல்டா உயிர்பெற திட்டங்கள் இல்லை.

விவசாய விளைநிலம் பாதுகாக்கப்படுமென்று தேர்தல் வாக்குறுதி எண் 43 உறுதி அளிக்கிறது. திரு ஸ்டாலின் அவர்களது திருச்சி உறுதிமொழி, இருபோக சாகுபடி நிலங்கள் 20 லட்சம் ஹெக்டேராக உயர்த்தப்படும்; தரிசு நிலங்கள் சாகுபடிக்கு கொண்டுவரப்படும், 11. 7 லட்சம் ஹெக்டேரில் பாசனப் பரப்பு அதிகரிக்கப்படும் என்று கூறுகிறது. ஆனால் இவற்றுக்கு முற்றிலும் மாறாக, தொழில் வளர்ச்சி என்ற பேரால் நிலங்கள் ஒருங்கிணைப்பு சட்டத்தைக் கொண்டு வந்து திமுக ஆட்சி விவசாயிகளின் அதிருப்தியை வரவழைத்துக் கொண்டது. பரந்தூர் விமானநிலையம் போன்ற கார்ப்பரேட் திட்டங்களுக்காக சிறு, குறு விவசாயிகளின் நிலங்களை பறிக்கவே இந்த நில ஒருங்கிணைப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதுதான், வெள்ளை அறிக்கை சொல்லும் கட்டமைப்பு சீர்திருத்தம் போலும்!

நெல்லுக்கு விலையாக ரூ 2500\ ம் கரும்புக்கு விலையாக ரூ 4000\ மும் அளிக்கும் வாக்குறுதி எண் 75 இன்னும் நிறைவேற்றப்படவில்லை. எப்போது நிறைவேற்றப்படும் என்று கால அட்டவணையும் சொல்லப்படவில்லை. நீர்மேலாண்மை, புதிய பாசனத்திட்டங்கள், நீர்வளப் பாதுகாப்புச்சட்டம் போன்றவை அறிவிப்பு நிலையிலேயே உள்ளன. வேளாண் கூட்டுறவுச் சங்களுக்கு தேர்தல் நடத்தாமல், கடந்த அதிமுக ஆட்சி, அவற்றை ஊழல் முறைகேடுகளின் அமைப்பாக மாற்றி கொள்ளை அடித்து வந்தது. திமுக அரசும் அவற்றுக்கு தேர்தல் நடத்தாமல் கூட்டுறவு ஜனநாயகத்தை மறுத்து வருகிறது. வாக்குறுதி எண் 41, கிராமப்புர தொழிலாளர்களுக்கு தேசிய ஊரக வேலைத்திட்டத்தில் 150 நாட்கள் வேலை வழங்க ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்று சொன்னது. ஆனால் இதுவரை எந்த அழுத்தமும் கொடுத்ததாக தெரியவில்லை. மாநில நிதியிலிருந்து கூடுதலாக 50 நாட்கள் வேலை கொடுக்கவும் முன்வரவில்லை.

வள்ளுவர் சிலைக்கு வெள்ளிவிழா கொண்டாடி மகிழ்ந்துள்ள திமுக அரசு, "சுழன்றும் ஏர்பின்னது உலகம்", நீரின்றி அமையாது உலகு" என்ற அவரது குறட்பாக்களை நினைவில் வைத்திருக்கிறதா என்று தெரியவில்லை. "உழுதுண்டு வாழ்வாரை" கார்ப்பரேட் பொருளாதாரத்தை "தொழுதுண்டு பின் செல்வோராக" ஆக்கிவிட்டதோ என்று கேட்கத் தோன்றுகிறது. அரிட்டாபட்டி விவசாயிகள் மத்தியில் தேர்தல் பிரச்சாரத்தை துவக்கியுள்ளார் முதலமைச்சர். வருகிற தேர்தலில் நீங்கள் என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள் என்று உங்களை பார்த்தாலே தெரிகிறது, என்று கூறிய முதலமைச்சர். அங்கு ஒரு குழந்தைக்கு 'வெற்றி' என்றும் பெயர் சூட்டியுள்ளார். 2021 தேர்தலில் திமுக வுக்கு வெற்றியளித்த விவசாயிகளுக்கு வெற்றியா? தோல்வியா? தமிழ்நாட்டு விவசாய சமூகத்துக்கு விவசாயத்துக்கு, பொருளாதாரத்துக்கு அமாவாசையா? பவுர்னமியா? செந்தில் பாலாஜிதான் சொல்ல வேண்டும்! விவசாயிகள் கோரிக்கைக்காக விவசாயி பஞ்சாபின் தல்லேவால் 53 நாட்களாக மரணப்படுக்கையில் கிடக்கிறார். விவசாய சமூகம் அணிதிரளுகிறது. குடியரசு கொண்டாட்டத்தில் குப்பையை அகற்றிய மோடி, குடியரசின் அடித்தளமான குடியானவர்களையும் குப்பையாக எண்ணி தள்ளிவிடுகிறார். மோடியிடமிருந்து குடியரசைக் காக்க, கூட்டாட்சியை, மாநில உரிமையை மீட்க குடியானவர்கள் இன்றி முடியாது என்பது முதலமைச்சர் ஸ்டாலினுக்கு தெரியாதா என்ன?



# சீமானின் அரசியல்

எஸ்விஆர்

லங்காவில் அந்த நாட்டின் அரசின் வெளிப்படையான ஆதரவுடன் 1983ஆம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் தமிழர்களுக்கு எதிராக நடந்த இனக்கொலையை அடுத்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் வாழ்வாதாரம் தேடி வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்தனர். அதற்கு முன்பே தமிழர்கள் மீது சிங்களர்கள் நடத்திய தாக்குதல்கள் இருந்தபோதிலும் மேற்சொன்ன நிகழ்வுதான் தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலைக்கான ஆதரவு பெருகச் செய்தது. அந்த ஆண்டு முதலே பல்வேறு தமிழீழப் போராளிக் குழுக்களும் தமிழகம் வந்தன. தமிழக மக்களுக்கும் தமிழீழ மக்களுக்கும் போராளிகளுக்குமிடையே பெருமளவிலான தொடர்பும் உறவும் தொடங்கியது அந்த ஆண்டில்தான்.

தமிழ்நாட்டில் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் 1937ஆம் ஆண்டிலிருந்தே உருவாக்கியிருந்த தமிழ் தேசிய உணர்வின் வெளிப்பாடாகத்தான் அன்று ஈழ விடுதலைப் போராளிகளுக்கான ஆதரவை வழங்கத் தொடங்கியவர்களில் பெரும்பாலும் பெரியார் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது பெரியாரின் கருத்துகளின் தாக்கம் பெற்றவர்களாகவோ இருந்தனர்.

அன்று மு.கருணாநிதியின் தலைமையில் இருந்த திமுக, எம்ஜிஆர் தலைமையிலிருந்த அஇஅதிமுக ஆகியவற்றுக்கிடையே இருந்த முரண்பாடும் பகைமையும் ஈழப் போராளிகள் மீது அக்கட்சிகள் கொண்டிருந்த நிலைப்பாட்டிலும் வெளிப்பட்டன. அன்று தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளை முற்றிலும் தன்வசமாக்கிக் கொண்டார். ஸ்ரீலங்காவிலுள்ள இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என 1987 ஜூலை இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியும் இலங்கைக் குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனவும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஈழப் போராளிகளில் விடுதலைப் புலிகள் மட்டுமே ஏற்றுக்கொள்ள மறுத்தனர் (ஈரோஸ் அமைப்பு எந்தக் கருத்தையும் சொல்லவில்லை.) அதற்கான காரணம் நியாயமானது: அது தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எவரையும் கலந்தாலோசிக்காமல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம். எனவே விடுதலைப் புலிகள் ஈழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர். அதன் விளைவாக இந்திய இராணுவப் படை அங்கு அனுப்பப்பட்டது. உலகின் நான்காவது பெரிய இராணுவமான இந்திய இராணுவத்தின் அமைதிப் படை தமிழீழப் பகுதியில் ஏராளமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதும், விடுதலைப் புலிகளின் கெரில்லாப் படையால் அவமானகரமான தோல்வியைத் தழுவி , ராஜிவ் காந்தியின் ஆட்சியின் இறுதிக் காலத்திலேயே முடிவு செய்யப்பட்டு வி.பி.சிங் ஆட்சியின் போது திரும்பப்பெறப்பட்டதும் வரலாறு.

ஆனால், இந்தியாவிலுள்ள முக்கிய நாடாளுமன்ற கம்யூனிஸ்ட் கட்சிகளான சிபிஐ, சிபிஎம் ஆகிய இரண்டும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்தன. மா-லெ கட்சிகள்,

குழுக்கள் ஆகியவற்றில் பெரும்பாலானவை மிகத் தாமதமாகவே ஸ்ரீலங்காவிலிருந்த தேசிய இனப் பிரச்சினையைப் புரிந்து கொண்டன. மாவோயிஸ்ட் கட்சி விடுதலைப் புலிகளின் கடைசி மூன்றாண்டுகளில் அவர்களை மிக தீவிரமாக ஆதரிக்கத் தொடங்கியது. இக்காரணங்களால், தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக இருந்தவர்களில் மிகப் பெரும்பாலோர் இடதுசாரி இயக்கங்களைச் சாராதவர்களாகவே இருந்தனர். சிலர் இடதுசாரி இயக்கங்களிலிருந்து வெளியேறியவர்களாகவும் இருந்தனர். 1969இல் நிறுவப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) தன் முதல் வேலைத்திட்டத்திலேயே இந்தியாவிலுள்ள தேசிய இனங்களின் சுய–நிர்ணய உரிமையைச் சேர்த்திருந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டிய தருணம் இது.

முள்ளிவாய்க்காலில் நடந்த இன ஒழிப்புக்குத் துணைபோன மன்மோகன் சிங் அரசாங்கத்தில் பங்கேற்றிருந்த திமுக, மதிமுக, பாமக அமைச்சர்களோ அக்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களோ, தமிழகத்தில் இருந்த திமுக அரசாங்கமோ ஒன்றிய அரசாங்கத்தைக் கண்டனம் செய்யும் வகையில் பதவி விலகவில்லை; எம்ஜிஆரின் மறைவுக்குப் பிறகு அஇஅதிமுகவின் தலைமைப் பொறுப்புக்கு வந்த ஜெயலலிதாவுக்கு அது சாதகமாயிற்று. ராஜிவ் காந்தி கொலை செய்யப்பட்டதை சாதகமாக்கிக் கொண்டு ஜெயலலிதா தமிழ்நாட்டு முதல்வராக எப்படி வந்தாரோ அதே போல விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று சித்தரித்து வந்த அவர், விடுதலைப் புலிகள் அழித்தொழிக்கப்படுவதற்குச் சில நாள்களுக்கு முன்பு ஈழ மக்களின் ‘இரட்சகராக’த் தன்னைக் காட்டிக் கொண்டார்.

விடுதலைப் புலிகள் கிட்டத்தட்ட அழித்தொழிக்கப்படும் தருணத்தில்தான் சீமான் தீவிரமான அரசியலுக்குள் நுழைந்தார். 2009இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் 2011இல் நடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலிலும் ஜெயலலிதாவின் அஇஅதிமுகவை ஆதரித்து பரப்புரை செய்ததுடன் திமுகவைக் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினார். விடுதலைப் புலிகளை ஆதரித்ததற்காக பழ.நெடுமாறன், வைகோ, கொளத்தூர் மணி, கு.இராமகிருட்டிணன்போன்றோர்போல சீமான் எந்த அரசு ஒடுக்குமுறைக்கும் ஆளாகவில்லை; சிறைத் தண்டனை பெறவில்லை. தியாகு, சுப.வீரபாண்டியன், கவிஞர் இன்குலாப், கவிஞர் அறிவுமதி, எழுத்தாளர் சூரியதீபன் போன்ற அறிவாளிகளைப் போலவோ விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனையும் அவரது கட்சியின் துணைப் பொதுச் செயலாளராக உள்ள வன்னி அரசு ஆகியோரைப் போலவோ புலிகளுக்கு நெருக்கமாக இருந்தவரல்லர் சீமான். தனித் தமிழ் இயக்கத்தைச் சேர்ந்த பெருஞ்சித்திரனாரின் ஆதரவாளர்கள், மா-லெ இயக்கப் பின்னணியைக் கொண்டிருந்த தமிழரசன், புலவர் கலியபெருமாள் ஆகியோரின் ஆதரவாளர்கள் போல கொடிய அரசு ஒடுக்குமுறைக்கு ஆளாகியவரல்லர் சீமான்.

ஆகவே தன்னைத் தனித்தன்மை கொண்டவராகவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவராகவும் காட்டிக் கொள்ளும் சீமானின் திரைப்படப் பின்னணியும் வாய்வீச்சுகளும் வரலாற்றறிவு பெற்றிராத புதிய தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்களை வசீகரித்தன. தன் அரசியல் பயணத்தின் தொடக்கத்தில் பெரியாரைப் புகழ்ந்து வந்த அவர், படிப்படியாக அவரை விமர்சிக்கத் தொடங்கினார். திராவிட இயக்க மரபையும் கம்யூனிச மரபையும் கொண்டிருந்தவர்களின் தமிழ் தேசியத்திலிருந்தும் ஈழ ஆதரவுச் செயல்பாடுகளிலிருந்தும் மாறுபட்டதாய் சீமான் போன்றவர்களின் தமிழ் தேசியம் வளரத் தொடங்கியது. அதாவது, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவற்றைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே குடியேறி தமிழ் நிலத்தோடு பின்னிப் பிணைக்கப்பட்டவர்களுமான சமூகத்தினரை தமிழர்களல்லாத வேற்றினத்தார் என்று அவர்கள் மீது வெறுப்புப் பேச்சு பேசும் பாசிச தமிழ் தேசியத்தை வளர்த்து வந்தார். அந்த தேசியத்தின் அடிப்படையில் எந்தத் தொகுதியிலும் வெற்றி பெறமுடியாது என்று தெரிந்தும் இதுவரை நான்கு தேர்தல்களில் ‘நாம் தமிழர் கட்சி’ வேட்பாளர்களை - எந்தக் கூட்டணியிலும் சேராமல் – போட்டியிட வைத்தார். ஆனால் அவர் எந்தத் தொகுதியிலும் போட்டியிடமாட்டார். கட்சிக்கும் அவருக்குமான செலவுக்கு எங்கிருந்து பணம் திரட்டுகிறார் என்பதைச் சொல்லமாட்டார். அவருடைய ஒரே நோக்கம் தன்னைத் தமிழகத்தின் தலைவராக ஆக்கிக் கொள்வதுதான். சங் பரிவாரம் இந்திய மக்களைப் பழங்கால, மூடத்தனமான, பகுத்தறிவுக்கு ஒவ்வாத கலாசாரத்தைப் பின்பற்றுமாறு அழைத்துச் செல்வதைப் போலத்தான், சீமான் நடைமுறைக்கு ஒவ்வாத இயற்கை வேளாண்மை போன்றவற்றைப் பரிந்துரைக்கிறார். இயற்கை மீது நேசம்

கொண்டவராகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் அவர் சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்கும், வேளாண்மையைத் துடைத்தொழிக்கும் வேதாந்தா நிறுவனம், மீத்தேன் திட்டம் போன்றவற்றுக்கு எதிரான எந்தப் போராட்டத்திலும் கலந்து கொள்ள மாட்டார். அவருடைய தமிழ் பாசிசம் அனைத்திந்திய இந்துத்துவ பாசிசத்துடன் எளிதாக ஒட்டிக்கொள்ளக் கூடியது. அதனால்தான் கிறிஸ்தவரான அவர் தற்சமயம் திருநீறு பூசிக் கொள்கிறார். 'சங்கி' என்றால் தம்பி என்ற பொருள் என்று விளக்கம் கொடுக்கிறார்.

அவருடைய பாசிசக் கருத்தியலுக்கு எடுத்துக்காட்டு, தமிழ்நாட்டில் நிலவும் மூன்று முக்கியமான முரண்பாடுகளின் மூன்றாவது முரண்பாடு என்று 'நாம் தமிழர் கட்சி ஆவண'த்தின் 37ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டவையாகும்: "தமிழியத்திற்கும் முகமதியத்திற்கும், தமிழியத்திற்கும் கிறித்துவத்திற்கும் இடையே முரண்பாடு". 39ஆம் பக்கத்தில் சொல்லப்பட்டுள்ளவை: " 3ஆம் முரண்பாடுகளான முகமதியமும், கிறித்துவமும் தமிழ் தேசியத்தை ஒவ்வொரு காலத்திலும் ஆளுமை செலுத்தியவை; சட்டப்பாதுகாப்பும், சொத்துடமை வலுவும், பன்னாட்டுப் பின்புலமும் கொண்டு, மதவழி தனி இனக்கட்டுமானம் கொண்டவை; முகமதியத் தமிழரும், கிறித்துவத் தமிழரும் தங்களுடைய முதன்மை அடையாளம், தமிழ்த் தேசிய அடையாளமே என்று உணர்ந்தறிந்து வருவாராயின், நட்பு முரண் வகையிலும், அல்வழிப் பகைமுரண் வகையிலும் இடம்பெறுவர்; இவர்கள் எச்சரிக்கையோடும் விழிப்போடும் அன்போடும் கையாளப்பட வேண்டிய தரப்பினர்"."முகமதியத் தமிழரும் கிறித்தவத் தமிழரும் ஒவ்வொரு காலத்திலும் தமிழ்த் தேசியத்தில் ஆளுமை செலுத்தினர்".


இதற்கு ஏதேனும் சான்றுகள் உண்டா? எந்தக் காலத்தில் தமிழ் இஸ்லாமியர்களும் தமிழ் கிறிஸ்தவர்களும் தமிழ்நாட்டில் ஆதிக்கம் செலுத்தினர்?

இவைபோன்ற ஆதாரமற்ற, அறிவுக்கொவ்வாத கூற்றுகளின் தொகுப்பாகக் கொண்டுள்ள 'நாம் தமிழர் கட்சி ஆவண'த்தை வைத்துக் கொண்டு , திமுக, அஇஅதிமுக மற்றும் அவற்றுடன் கூட்டணி வைத்துக் கொள்ளும் பிற கட்சிகள் மீது அதிருப்தி கொண்ட, வேலையில்லாத, வரலாற்றறிவு இல்லாத இளைஞர் கூட்டத்தை இன்றைய திராவிட அரசியல் கட்சிகள் என்ற லென்ஸின் மூலமாகப் பெரியாரை பார்க்கும்படி செய்கிறார் சீமான்.

இப்படி ஒவ்வொரு படியாக ஏறிவந்து அண்மையில் பெரியார் மீது மிக அருவருப்பான அவதூறொன்றைக் கூறியுள்ளார் சீமான். பெரியாரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் நாட்டுடைமையாக்கினால் தான் தனது அவதூறுக்கான ஆதாரத்தைக் காட்ட முடியும் என்கிறார். அப்படியானால் அந்த அவதூறை எந்த அடிப்படையில் சொல்கிறார் என்று கேட்பதற்குக்கூட பத்திரிகை நிருபர்களுக்கு நேர்மையும் தைரியமும் இல்லை. ஆனால் அண்ணாமலையும் தமிழிசை சவுந்திரராஜனும் தங்களிடம் ஆதாரம் இருப்பதாகவும் ஆனால் அது அருவருப்பானதாக இருப்பதால் பொதுவெளியில் வெளியிட முடியாது என்று கூறுகிறார்கள். ஏற்கெனவே பொதுவெளியில் ஆயிரக்கணக்கானோரால் பார்க்கப்பட்ட, கேட்கப்பட்ட அந்த அவதூறுக்கான ஆதாரம் பெரியார் நடத்திய 'குடி அரசு' ' விடுதலை' போன்ற ஏடுகளில், இன்ன இதழில், இன்ன தேதியில் உள்ளது என்று சொல்வதற்கு அவர்கள் தயங்குவது ஏன்?

அம்பேத்கரை தன்வசமாக்க முயன்று, பின்னர் அவரை அமித்ஷாவை விட்டு இழிவுபடுத்தியது ஆர்.எஸ்.எஸ். தமிழ்நாட்டிலுள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஒன்றைத் தவிர (அது அண்ணல் அம்பேத்கர், பெரியார் ஆகிய இருவரையும் இணைக்கும் கட்சி) இந்தியாவிலுள்ள வலுவான அம்பேத்கரியக் கட்சிகள் அனைத்தையும் தன்வசமாக்கியுள்ளது.

சங் பரிவாரத்தால் (கம்யூனிஸ்டுகளைத்) தவிர செரிக்கவே முடியாத, கிட்ட நெருங்கவே முடியாத சக்தியாகப் பெரியார் திகழ்கிறார். சங் பரிவாரத்தின் கருத்துநிலையின் முக்கிய கூறுகளான சாதியம், பெண்ணடிமைத்தனம், மூடநம்பிக்கை, இவையனைத்துக்கும் நியாயம் கற்பிக்கும் இந்து சாஸ்திரங்கள், கடவுள்கள் ஆகியவற்றுக்கு முற்றிலும் எதிராக இருப்பவர் பெரியார். சீமான் பரப்பிவரும் அவதூறு பெரியாரை மட்டும் இழிவு செய்யக்கூடியது அல்ல; மாறாக தமிழகத்தில் நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டுவரும் சமூக நீதி, மதச்சார்பின்மை, அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கும் அரசியல் மரபு ஆகியவற்றுக்குக் குழிபறிக்கும் நோக்கம் கொண்டது. சீமானின் அரசியலையும் அதன் வளர்ச்சியையும் எளிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. எனவே இதைக் கூர்ந்து கவனித்து, சீமான் வடிவத்தில் இன்று நிலவுகிற சங் பரிவார கருத்துகளை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை 'இண்டியா' கூட்டணியில் உள்ள கட்சிகளும் அதற்கு வெளியே உள்ள முற்போக்குச் சக்திகளும் வகுத்துக் கொள்ள வேண்டும்.



# இந்தியாவின் 'உண்மையான சுதந்திரம்' பற்றி ஆர்எஸ்எஸ் சொல்லும் தீய கதை

பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் அரசே ராமர் கோயிலைக் கட்டி குடமுழுக்கும் நடத்தியது. அதுதான் இந்தியாவின் உண்மையான சுதந்திரத்தை வரையறுக்கும் தருணமாக விளங்குகிறது என மோகன் பகவத்தின் அறிக்கை விவரிக்கிறது. இதன் மூலம் தேசியவாதம், சுதந்திரம் பற்றிய ஆர்எஸ்எஸ்-சின் பார்வை நினைவூட்டப்படுகிறது. இந்திய விடுதலை இயக்கத்தின் உண்மையான வரலாற்றுக்கும் விருப்பங்களுக்கும் முற்றிலும் நேரெதிரானதாக தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் மீண்டும் ஒருமுறை நினைவூட்டுகிறது. ஆர்எஸ்எஸ்-சின் வரலாறு, கருத்தியல் ஆகியவற்றின்படி பார்க்கும்போது, அந்த அமைப்பின் தலைவரிடமிருந்து இத்தகைய அறிக்கையை மட்டுமே எதிர்பார்க்க முடியும்.

மோடி அரசாங்கத்தின் மூலமாக முன்னெப்போதும் கண்டிராத அரசியல் அதிகாரத்தின் பிடியை ஆர்எஸ்எஸ் தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறது. ஆதலால் இந்தியக் குடியரசு அமைக்கப்பட்ட, அரசமைப்புச் சட்ட பிரகடனத்தின் 75 வது ஆண்டில், ஆர்எஸ்எஸ்-சின் வழக்கமான கருத்தியல் நிலைப்பாடு, விடுதலை இயக்கத்தின் மரபு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மதச்சார்பற்ற, ஜனநாயக குணாம்சம் ஆகியவை மீதான உண்மையானதோர் போர் பிரகடனத்திற்கு ஒப்பானதாகும்.

காலனிய அடிமைத்தளையிலிருந்து முழுமையான விடுதலைக்கான ஆற்றல்மிகு தேசிய விழிப்புணர்வையும் அறுதியிடலையும் இந்தியா கண்டு கொண்டிருந்த நேரத்தில், 1925 இல் ஆர்எஸ்எஸ் அமைக்கப்பட்டது. போராட்டத்தின், அணி திரட்டலின் வடிவங்கள் மீதும், பின்-காலனிய சமூக, அரசியல் ஒழுங்கமைவின் குணாம்சம் மீதும், விடுதலை இயக்கத்தின் பலதரப்பட்ட நீரோட்டங்களுக்கிடையே விவாதங்களும் வேறுபாடுகளும் நிச்சயமாக இருந்தன. இந்திய கம்யூனிஸ்டுகளை உருவாக்கிய தலைமுறையான பகத்சிங்கும் அவரது தோழர்களும் சோசலிச இந்தியா என்ற பார்வையைக் கொண்டிருந்தனர்; கம்யூனிஸ்டு தலைமையிலான விவசாய இயக்கம், நிலப்பிரபுத்துவத்தை முழுமையாக ஒழித்துக் கட்டுவதன் பதாகையை பறக்க விட்டது; சாதி அழித்தொழிப்புக்கான உரத்த அழைப்பை அம்பேத்கர் விடுத்த, அதேவேளையில் சுபாஷ் போஸும் நேருவும் திட்டமிட்ட பொருளாதாரத்தை முன்வைத்தனர். ஆனால் பிரிட்டிஷ் காலனிய ஆட்சியாளர்களுடன் கூடிக் குலாவிய, மதவெறி அரசியலை போதித்தும் நடைமுறைப்படுத்தியது இந்துமகாசபை ஆர்எஸ்எஸ் கூட்டணி. பிரிட்டிஷ் ஆட்சியின் பிரித்தாளும் திட்டத்திற்கு துணைசெய்த ஒரே ஒரு கருத்தியல் போக்கும் இந்து மகாசபை, ஆர்எஸ்எஸ் கூட்டணி தான். இதை முஸ்லிம் லீக்-கும் பின் தொடர்ந்தது. உலகின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்த காலனிய எதிர்ப்புக் கலகங்கள், புரட்சிகளிலிருந்து தேசப்பற்றுமிக்க ஜனநாயக இந்தியர்கள் உத்வேகம் பெற்றனர். ஆனால் ஆர்எஸ்எஸ்-சின் கருத்தியல் தூண்டுதலும் அமைப்பு மாதிரியும் இத்தாலியின் முசோலினி, ஜெர்மனியின் ஹிட்லரிடம் இருந்து வந்தது.

காலனிய இந்தியாவில் உண்மையான தேசிய விழிப்புணர்வு நாட்டு விடுதலைக்கான உறுதியான காலனிய எதிர்ப்பு வேட்கையை மட்டும் கோரவில்லை. மதங்களின் எல்லைகளைக் கடந்து சமூக ஒருமைப்பாட்டின் வலுவான மானுட பிணைப்பையும் அது கோரியது. நாட்டிற்கு எதிரான தடைகளாக விளங்கும் பார்ப்பனியத்தின் மூலம் ஊட்டி வளர்க்கப்பட்ட, பெரும்பான்மை (பகுஜன்) மக்களை விலக்கி வைத்த, அவர்களை விளிம்பு நிலையில் தள்ளிய, சமத்துவமின்மையை தகுதியாகக் கொண்ட சாதி அடிப்படையிலான படிநிலையை அது நிராகரித்தது. கல்வியிலிருந்து, பொது வாழ்விலிருந்து விலக்கி வைக்கப்பட வேண்டியவர்களாக, குழந்தைபெறும் எந்திரங்களாக, வீட்டு வேலை செய்யும் வேலைக்காரர்களாக, தாழ்ந்தவர்களாக பெண்களை நடத்திய ஆணாதிக்க கால் விலங்கையும் அந்த தேசிய விழிப்புணர்வு நிராகரித்தது. காலனிய எதிர்ப்பு தேசியவாத சோதனையில் ஆர்எஸ்எஸ் தோல்வியுற்றது. அது மட்டுமல்ல பார்ப்பனிய சட்டதிட்டத்தோடும் அது ஆழமாகப் பின்னிப் பிணைந்திருந்தது. நவீன இந்தியாவுக்கான அரசமைப்புச் சட்டத்தை

நோக்கிய அம்பேத்கரின் பயணம், சமூக அடிமைத் தனத்திற்கான பார்ப்பனிய, ஆணாதிக்க சட்டமான மனு ஸ்மிருதியை தீரமுடனும் உறுதியுடனும் கண்டனம் செய்து தொடங்கியது. ஆனால், ஆர்எஸ்எஸ்ஸோ மனுஸ்மிருதியை ஆரத் தழுவிக் கொண்டது. 'அதில் பாரதிய என' எதுவுமில்லை, அந்நிய கருத்தால் ஊக்கம் பெற்ற ஆவணமென அம்பேத்கரின் தலைமையில் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டத்தை அது நிராகரித்ததில் ஆச்சர்யப்பட ஒன்றுமில்லை.

பிரிவினையின் பெருந்துயரமும், அதனால் உண்டான மாபெரும் உயிரிழப்புகள், பேரழிவு, இடப்பெயர்வு இருந்தபோதிலும் விடுதலை இயக்கத்தின் மதச்சார்பற்ற, ஜனநாயக சமத்துவ நெறிமுறைகளை ஆர்எஸ்எஸ்-மகாசபையின் கூட்டினால் வலுவிழக்க செய்ய முடியவில்லை. ஆர்எஸ்எஸ் தனிமைப்படுத்தப்பட்டது. மகாத்மா காந்தியின் படுகொலைக்குப் பிறகு பெரிய அவப்பெயரை சம்பாதித்துக் கொண்டது. மேலும் காந்தியின் படுகொலை நேரத்தில் சர்தார் பட்டேலால் அதன் மீது சுமத்தப்பட்ட தடையிலிருந்து வெளியேவர, அரசமைப்புச் சட்டத்திற்கும் தேசிய மூவர்ணக் கொடிக்கும் தனது ஆதரவை அறிவிக்க வேண்டி வந்தது. முதல் பொதுத் தேர்தல் 1952 ஆம் ஆண்டு நடைபெற்றது. சுதந்திர இந்தியாவின் அரசியல்-பொருளாதார திசைவழி மீதான உண்மையானதொரு பொது வாக்கெடுப்பாக அது இருந்தது. அதில் ஆர்எஸ்எஸ் ஆதரவு பெற்ற ஜன சங்கம், பிற இரு இந்து அமைப்புகளான இந்து மகா சபா, அகில பாரதிய ராம்ராஜ்ய பரிசத் ஆகியவை நாடாளுமன்றத்தின் 489 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட அவைக்கு, வெறும் 10 இடத்தில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது.

70 ஆண்டுகளுக்குப் பிறகு, அரசமைப்புச் சட்டத்திற்கு அதிகரித்து வரும் ஆபத்தை இந்திய மக்கள் உணர தொடங்கிவிட்டனர் என்பதை 2024 மக்களவைத் தேர்தல்கள் மீண்டும் ஒருமுறை காட்டின. மதச்சார்பற்ற, ஜனநாயக இந்தியாவை மதவெறி பாசிச இந்தியாவாக உருமாற்ற துடிக்கும் சங்கி-பாஜக திட்டத்திற்கு பரவலான எதிர்ப்பின் அடையாளங்களால் நிலை குலைந்து போன சங்கி-பாஜக அமைப்பு விடுதலை இயக்கத்தையே மதிப்பிழக்க செய்யவும் அவமதிக்கவும் முயற்சித்து வருகிறது. இந்து மேலாதிக்கவாத அடிப்படையில் இந்திய தேசியவாதத்தை மறு வரையறை செய்யும் எதிர்க் கதையாடலை உருவாக்கவும் முயற்சித்து வருகிறது. அம்பேத்கரை இழிவுபடுத்தும் அமித் ஷா-வின் கருத்துரையும் இந்தியாவின் உண்மையான சுதந்திரம் எனப்படுகிற மோகன் பகவத் கண்டுபிடிப்பும், விடுதலை இயக்க வரலாறு, அதிலிருந்து எழுந்து வந்த அரசமைப்பு பற்றிய பார்வை, அடித்தளம் மீதான ஒரே நேரத்திலான இருமுனைத் தாக்குதலாக அது பார்க்கப்பட வேண்டும். அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு ஆதரவான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, அயோத்தி சர்ச்சையை தீர்ப்பதற்கான சமரச பொறியமைவாகவும், அதேவேளையில், அதுபோன்ற எவ்வித கோரிக்கைகளையும் பிற மசூதிகளுக்கு எதிராக எழுப்புவதை ஒருபோதும் அனுமதிக்க கூடாது என்னும் நோக்கமுடையதாகும். ஆனால், மத வழிபாட்டுத் தலங்கள் பாதுகாப்பு சட்டம் 1991 ஐ மாற்றியமைத்து, இந்திய சுதந்திரத்தின் வரலாற்றையும் அதன் பொருளையுமே கூட மறுவரையறை செய்ய சங்கி-பாஜக படையணி உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட சலுகையை பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது.

சாமானிய மக்களின் வாழ்க்கையை கடுமையாக பாதிக்கிற அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடி பற்றி பகவத்துக்கு தெரியும். ஆதலால் அவர் ராமர் கோயிலை இந்தியாவின் 'உண்மையான சுதந்திர'த்தின் குறியீடாக மட்டுமின்றி, வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பாதை கோயிலின் வழியாகச் செல்கிறது எனக் கூறி, இந்தியாவின் பொருளாதார சிக்கல்களுக்கான தீர்வாகவும் அதை முன்வைக்கிறார். ஆன்மீக புத்தெழுச்சி, கலாச்சார தேசியவாதத்தின் அடிப்படையிலான பொருளாதார மேம்பாட்டுக்கான அவரது ஆய்வறிக்கைக்கு வலுச் சேர்க்க அவர் இஸ்ரேலை முன்மாதிரியாக பயன்படுத்த முயற்சிக்கிறார்! ஒரு கோடிக்கும் குறைவான அளவு மக்கள்தொகையைக் கொண்ட இஸ்ரேல் போன்ற ஒரு நாட்டுடன்,



140 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்டுள்ள உலகின் மிகவும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவை ஒப்பிடவே முடியாது. ஆனால் அதன் உண்மையான அபத்தம் வரலாறில் இருக்கிறது. இஸ்ரேலின் வளம் எனப்படுவது பாலஸ்தீனத்தின் மீதான குடியேற்ற காலனிய கட்டுப்பாட்டாலும் அமெரிக்காவின் தங்குதடையற்ற ஆதரவாலும் இயக்கப்படுகிறது. ஒரு காலனியாக, தேச விடுதலைக்கான நீண்ட நெடிய காலனிய எதிர்ப்பு போராட்டம் நடத்திய, ஏகாதிபத்திய மேலாதிக்கத்தின் தொடரும் இன்றைய எதார்த்தமாகக் கொண்டுள்ள, இந்தியாவினுடைய சொந்த வரலாற்று ரீதியான அவலநிலையை, காலனிய கொள்ளை, இனப்படுகொலை வன்முறையின் இன்றைய மிகப்பெரிய குற்றவாளியுடன், அதிர்ச்சிகரமாக ஒப்பிடுவதை விட பெரிய கேலிக்கூத்து இருக்க முடியுமா?

பல பத்தாண்டுகால வீரம் செறிந்த போராட்டங்கள், எண்ணற்ற விடுதலைப் போராளிகளின் மாபெரும் தியாகங்கள், பழங்குடியினரின் புகழ்மிக்க கலகங்கள், விவசாயிகளின் போர்க்குணம்மிக்க போராட்டங்கள், தொழிலாளர் வர்க்க போராட்டங்கள், பரந்த மக்கள் எழுச்சிகள் வழியாக பெற்ற சுதந்திரத்தின் 77 ஆண்டுகளுக்குப் பிறகு, அயோத்தியில் மற்றொரு ராமர் கோயிலை கட்டிய பிறகு தான் உண்மையான சுதந்திரம் நிறுவப்பட்டுள்ளது என ஆர்எஸ்எஸ் தற்போது கூறுகிறது. இந்திய அரசமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட 75வது ஆண்டுவிழாவில், அந்த அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்த முதன்மை சிற்பியின் பெயரையும் கருத்துக்களையும் உச்சரிப்பது 'நாகரீக பாணி' ஆகிவிட்டது என உள்துறை அமைச்சர் கூறுகிறார். அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரையில் பொறிக்கப்பட்டுள்ள மதச்சார்பின்மை, சோசலிச என்ற வார்த்தைகளை நீக்குவதற்கான விண்ணப்பத்தை உச்ச நீதிமன்றம் நிராகரித்துவிட்ட போதிலும், நல அரசின் குறிக்கோள்களை மறுஉறுதி செய்தபோதிலும், விவசாயத்தை கார்ப்பரேட்டுகள் கைகளில் தாரைவார்க்கவும், வாரத்திற்கு 90 மணி நேரங்கள் வேலை செய்ய வேண்டும் என அதிகரித்து வரும் கார்ப்பரேட்டுகளின் கூச்சல்களுக்கு மத்தியில், தொழிலாளரை தண்டிக்கும் சட்டத் தொகுப்புகள் மூலமாக தொழிலாளர் வர்க்கத்தை அடிபணிய வைக்கவும் இந்த அரசாங்கம் தீர்மானகரமாக உள்ளது. நமது முன்னோர்கள் விடுதலையை வென்றார்கள். ஆர்எஸ்எஸ்-சின் பாசிசக் கருத்தியலை நிராகரித்து, நம்முடைய அரசமைப்புச் சட்டத்தை நமக்குத் தந்தார்கள். இன்று விடுதலை இயக்க வரலாற்றின் மீது போர் தொடுக்க, புகழ்மிக்க தேசிய விழிப்புணர்வின் போக்கில் நாம் பெற்ற பலன்கள் அனைத்தையும் மாற்றிவிட, ஆர்எஸ்எஸ் அரசு அதிகாரத்தில் ஆழமாக வேரூன்றி விட்ட நிலையில், இந்திய மக்களாகிய நாம் இந்த சதியினை முறியடிக்க நமது அனைத்து வலிமையையும் நிச்சயமாக வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

**எம் எல் செய்திக் கடித தலையங்கம்**
**தொகுதி 24; எண் 4, (21-27 ஜனவரி, 2025**

19ம் பக்க தொடர்ச்சி

எதிராகவும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. கல்வி தனியார்மயம்,தேசிய கல்விக் கொள்கையை எதிர்த்தும் தலைவர்கள் உரையாற்றினர்.

### உத்தரகாண்ட்

உத்தரகாண்ட், ருத்ராபூர் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் லலித் கலந்து கொண்டு உரையாற்றினார். குடியரசின் 75 வது ஆண்டு என்பது வெறும் கொண்டாட்டம் அல்ல, அது அரசமைப்புச் சட்டத்தை பாதுகாக்கும் உறுதிப்பாட்டைக் குறிப்பதாகும் என்றார். வழக்கறிஞர் அமர்தீப் கவுர் அரசியல் சட்டம் எல்லா மதங்கள், சாதிகள், பாலினங்கள், பிராந்தியங்கள் என அனைத்துக்கும் சம உரிமை வழங்கி இருக்கிறது என்றும் இப்போது உள்ள அரசாங்கத்தால் அவை அச்சுறுத்தலுக்குள்ளாகி உள்ளன என்றும் குறிப்பிட்டார்.

### ஜார்க்கண்ட்

ராஞ்சி, மகேந்திர சிங் நினைவு அரங்கில் மூவர்ணக் கொடி ஏற்றத்துடன் நிகழ்ச்சி துவங்கியது. மதிய உணவுத் திட்டத் தொழிலாளர் தலைவரும் கட்சியின் மாநிலக் கமிட்டி உறுப்பினருமான அனிதா தேவி ஒருங்கிணைத்த கூட்டத்தில், முகப்புரை வாசித்து உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. கூட்டத்தில் பேசிய மாநிலக் கமிட்டி உறுப்பினர் ஹறி பிரசாத் பாபுவும் மாவட்டச் செயலாளர் பிந்தா பஸ்வானும் மக்களை அணி திரட்டுவதன் மூலமும் எதிர்ப்பியக்கத்தின் மூலமும் மட்டுமே அரசமைப்புச் சட்டம் மீதான தாக்குதலை தடுத்திட முடியும் என்றனர். சலுகை சார் முதலாளிகளுக்கு நாட்டை விற்கின்ற இந்த அரசு, மக்களை திசை திருப்பவே மதவாத பதட்டத்தை கிளப்பி விடுவதோடு அம்பேத்கரை இழிவு படுத்தும் செயலிலும் இறங்கி வருவதாக கூறினார்.

### மேற்கு வங்கம்

மேற்கு வங்கத்தின் 24 பர்கானா மாவட்டத்தில் மூவர்ணக் கொடியை ஏற்றிய தோழர் ஜெயந்திதாஸ் குப்தா நமது அரசியல் சட்டம் சாதி,மத, பாலின வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் சுதந்திரம், சமத்துவம் ,சகோதரத்துவத்தை உறுதி செய்கிறது என்றார்.அரசமைப்புச் சட்டம் என்பது வெறும் ஆவணம் அல்ல; அது மக்களுக்கான உயிர்ப்புடன் இருக்கும் உறுதிமொழி என்றும் சொன்னார். கூட்டத்தில் திரளாக கலந்து கொண்டவர்கள் வளர்ந்து வரும் மனுவாத சிந்தனைக்கு எதிராக நாட்டின் ஜனநாயகத்தை, அரசமைப்புச் சட்டத்தை பாதுகாக்க உறுதி எடுத்துக் கொண்டனர்.

கர்நாடகா, தில்லி, அசாம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களிலும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



# ஒட்டுமொத்த டங்ஸ்டன் சுரங்கத்திட்டத்தை ரத்து செய்யக்கோரி அவிமச நடத்திய பொது விசாரணை

அகில இந்திய விவசாயிகள் மகாசபை - AIKM, இகக(மா லெ) சேர்ந்து, 2025 , சனவரி 23 அன்று மதுரை கிருஷ்ணய்யர் சமூகக் கூடத்தில் பொது விசாரணை ஒன்றை நடத்தியது.

நிகழ்ச்சியின் தொடக்கமாக, சுற்றுப்புற சூழல் களப்பணியாளர், கிரானைட் கொள்ளை எதிர்ப்பாளர் அரிட்டாபட்டி ரவிச்சந்திரன், கனிமவளக் கொள்ளையை எதிர்த்ததற்காக கனிமவளக் கொள்ளையர்களால் கொல்லப்பட்ட புதுக்கோட்டை, திருமயம் ஜகபர் அலி, தமிழ்நாட்டு விவசாயம், இயற்கை வளம், கனிமங்கள், அரியவகை தாதுக்கள், ஈதேன், மீதேன் அணுமின் நிலையங்கள் உள்ளிட்ட கார்ப்பரேட் கொள்ளை எதிர்ப்பு போராட்டங்களில் உயிரிழந்தவர்களுக்கும் மவுனஅஞ்சலி செலுத்தப்பட்டது.

பொது விசாரணையில், மேலூர் வட்ட டங்ஸ்டன் எதிர்ப்பு போராளிகள் பலரும் தங்கள் கருத்துக்களை பதிவு செய்தனர்.

“மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களில் மொத்த டங்ஸ்டன் திட்டத்தையும் ரத்து செய்ய வேண்டும், தமிழ்நாட்டில் அமைக்கத் திட்டமிட்டுள்ள அனைத்து கனிம வளக் கொள்ளைத் திட்டங்களையும் திரும்பப் பெற வேண்டும்; கனிமவளங்கள், சுரங்கங்கள் திருத்தச் சட்டம் 2023 ரத்து செய்ய வேண்டும்; திமுக தேர்தல் அறிக்கை வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக தமிழ்நாட்டின் கனிம வளங்களை அரசு ஏற்று நடத்திட வேண்டும். மேலூர் வட்டத்தை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டும், இங்குள்ள பல்லுயிர்ச்சூழல், ஆயிரக்கணக்கான ஆண்டுகளான பண்பாட்டுச் சின்னங்களை பாதுகாக்க சிறப்புச் சட்டம் கொண்டு வர வேண்டும்” என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களை, நீதிக்கான மக்கள் இயக்க மாநில அமைப்பாளர் அ. சிம்சன் முன்மொழிய பொதுவிசாரணை ஒருமனதாக நிறைவேற்றியது.

பொது விசாரணையில் பேசியவர்களின் கருத்துகள்

**விமலா:** சுற்றுச் சூழல் போராளி அரிட்டாபட்டி ரவிச்சந்திரனின் சகோதரி

ரவிச்சந்திரனை இந்த அளவுக்கு வெளிக்கொண்டு வருவீர்கள் என எதிர்பார்க்கவில்லை. நன்றி. என் தம்பி உயிரோடு இருக்கும் வரை இந்த மண்ணைப் பாதுகாக்கப் போராடினான். இன்று ஒரு ரவிச்சந்திரன் மட்டுமல்ல, எண்ணற்ற ரவிச்சந்திரன்கள் இங்கு இருப்பதைப் பார்க்கிறேன்.

**பக்ருதீன்: டங்ஸ்டன் எதிர்ப்புக் கூட்டமைப்பு**

டங்ஸ்டன் பிரச்சனை 1996இல் துவங்கிவிட்டது. 2018இல் ஆய்வைத் துவங்கும்போதுதான் நமக்குத் தெரியவருகிறது. அப்போதே உடனடியாக டங்ஸ்டன் எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பாக கம்பூர் செல்வராஜ் எதிர்ப்புத் தெரிவித்தார். ஆய்வு தொடர்பாக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு எதுவும் தெரியவில்லை.

திட்டத்தை எதிர்த்து மாவட்ட ஆட்சியருக்கு மனுக் கொடுத்தோம். இது தொடர்பாக அவருக்கும் தெரியவில்லை. அரிட்டாபட்டி பகுதியில் உள்ள தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை, வேளாண்மையை அழிக்கும், புற்றுநோயை உருவாக்கும் இந்த டங்ஸ்டன் சுரங்கம் வேண்டாம் என்று கிராமசபையில் தீர்மானம் நிறைவேற்றினோம். அகர்வால் லாபம் சம்பாதிக்க மக்கள் ஏன் பலியாக வேண்டும்? கேரள அரசைப் போல தமிழக அரசும் கனிமவளம் தொடர்பாக கொள்கை முடிவு எடுக்க வேண்டும். பகாசுர நிறுவனங்கள் எங்கள் மண்ணைச் சூறையாட அனுமதிக்க மாட்டோம்.

**அரிட்டாபட்டி பார்த்திபன் :**

15 வருடங்களாக இந்தப் பகுதியைப் பாதுகாக்கப் போராடி வருகிறோம். முதலில் இந்தத் திட்டத்தை வதந்தி என்றார்கள். மதுரை, திண்டுக்கல், சிவகங்கை உள்ளிட்ட 5 மாவட்டங்கள் பாதிக்கப்படுகின்றன. முதலில் கம்யூனிஸ்ட் தோழர்கள்தான் இதைக் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள். மக்களவை உறுப்பினர் வெங்கடேசன்

நாடாளுமன்றத்தில் பேசினார். மக்களைப் பற்றி ஆட்சியாளர்கள் கவலை கொள்ளவில்லை. மாவட்டத்திற்கு வெளியில் இருந்தும், கடல் கடந்தும் ஆதரவு கொடுக்கிறார்கள். போராட்டத்திற்கு காவல்துறையின் அச்சுறுத்தல் இருந்தது. நக்சலைட்டுகள், தீவிரவாதிகள் என்று எங்களை அச்சுறுத்தினார்கள்.

**அரிட்டாபட்டி கருப்பண்ணன் :**

அரிட்டாபட்டிக்கு அரணாக நிற்கும் உங்களுக்கு எங்கள் நன்றி. அரசியல்வாதிகள் பின்னே நாம் செல்லக்கூடாது. ஒவ்வொருவரும் தன்னார்வத்துடன் இந்த மண்ணைப் பாதுகாக்க வேண்டும். அரசாங்கம்தான் அமைதியாக வாழ்ந்த எங்களைப் போராளிகளாக மாற்றியிருக்கிறது. எங்களைத் தலைநிமிரச் செய்தவர்கள் செங்கொடிக்காரர்கள்.

**வழக்கறிஞர் ஸ்டாலின் (முல்லைப் பெரியாறு ஒரு போக விவசாயிகள் சங்கம்) :**

தோழர் நல்லக்கண்ணு முயற்சியால் மணற்கொள்ளை தடுக்கப்பட்டது. இந்தப் பிரச்சனையில் ஒருவர் கொல்லப்பட்டார். அடுத்து கிரானைட் பிரச்சனை. அடுத்து முல்லைப் பெரியாறு பிரச்சனை. இப்போது டங்ஸ்டன் பிரச்சனை. மாவட்ட ஆட்சியரிடம் மனுக் கொடுத்தோம். அவர் வதந்தி என்று சொல்லிவிட்டார். இந்தத் திட்டம் ரத்து செய்யப்பட வேண்டும். இந்தப் பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டும்.

**இகக (மாலெ) மதுரை மாவட்டச் செயலாளர் சி.மதிவாணன் வரவேற்புரை ஆற்றினார். பழ.ஆசைத்தம்பி, மாநில செயலாளர், இகக (மாலெ) துவக்க உரை ஆற்றினார்.**

பொதுவிசாரணை நடுவர்களாக அ. சந்திரமோகன், அகில இந்திய விவசாயிகள் மகாசபை, பெ. சண்முகம், மாநில தலைவர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் - சிபிஎம், இந்திரஜித், மாநில துணைச் செயலாளர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் - சிபிஐ, பேரா. முரளி, தொல்லியல் ஆய்வாளர் சாந்தலிங்கம், வீ. பிரபாகரன், பூவுலகின் நண்பர்கள், பாலசுந்தரம், தேசிய துணைத் தலைவர், அவிகிதொச ஆகியோர் இருந்தனர்.

தீப்பொறி நிதி: இகக (மாலெ) மாதமிருமுறை அரசியல் ஏட்டிற்கு பொதுவிசாரணை சார்பாக ரூ10,000/ நிதி அளிக்கப்பட்டது.

**டங்ஸ்டன் திட்டம் ரத்து மக்கள் போராட்டத்தின் வெற்றி**

டங்ஸ்டன் திட்டம் முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி சார்பாக ஜனவரி 23 அன்று மதுரையில் பொதுவிசாரணை நடந்த அன்று மாலையே டெல்லியில் ஒன்றிய அரசு டங்ஸ்டன் திட்டம் முழுமையாக ரத்து செய்யப்படுவதாக அறிவித்தது. பாஜக இதற்குக் காரணம் நாங்கள்தான் என்றது. தமிழ்நாட்டில் ஆளும் திமுகவோ சட்டமன்றத்தில் நாங்கள் டங்ஸ்டன் திட்டத்தை அனுமதிக்க மாட்டோம் என்று தீர்மானம் நிறைவேற்றியதால்தான் ஒன்றிய அரசு இவ்வாறு அறிவித்துள்ளது அதனால் நாங்கள்தான் இதற்கு காரணம் என்றது. ஒன்றுபட்ட மக்கள் போராட்டம்தான் இதற்குக் காரணம் என்றாலும், அதனைத் தங்கள் பிடிக்குள் நிறுத்த பாஜகவும் திமுகவும் கடினப்பட்டு உழைத்தன. ஜனவரி 21,22 தேதிகளில் டெல்லி சென்று ஒன்றிய துணை அமைச்சரைச் சந்தித்தார். முதல் நாளில் அமைச்சர் அளித்த உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு திரும்பிச் செல்ல மறுத்த குழுவினர், உறுதியான தகவல் கிடைத்த பின்னர்தான் திரும்புவோம் என்று அறிவித்து டெல்லியில் தங்கிவிட்டனர். ஜனவரி 23 மாலை 5 மணி அளவில் ஒன்றிய அரசின் செய்தி வெளியானது.



டங்ஸ்டன் சுரங்கத் திட்டம் அறிவிக்கப்பட்டவுடனேயே அப்பகுதி மக்கள் போராட்டத்தையும் தொடங்கி விட்டார்கள். ஆரம்பத்தில் அண்ணாமலை உள்ளிட்ட பாஜகவினர் இந்தத் திட்டம் நாட்டிற்கு நல்லது. அதற்கு

எதிராகப் போராடுவது நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானது என்றெல்லாம் பேசினார்கள். மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி உள்ளிட்ட இடதுசாரி, முற்போக்கு, ஜனநாயக சக்திகள் மக்களோடு போராட்டக் களத்தில் நின்றன. தொடர் பரப்புரை இயக்கத்தையும் போராட்டங்களையும் நடத்தின. தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதால் ஆளும் கட்சிகள் போட்டி போட்டும் மக்களோடு நிற்பதாகக் காட்டிக் கொள்கிறார்கள். தமிழ்நாடு அரசு அதன் செலவிலேயே முதல்வரை அழைத்து நன்றி தெரிவிக்கும் கூட்டத்தையும் நடத்திக் கொண்டுள்ளது. இதைத் தொடர்ந்து அதிமுக தலைவர் எடப்பாடி பழனிசாமியும் சென்று வந்துள்ளார். எதிர்பார்த்தபடியே அமைச்சர் கிஷன்ரெட்டியும் அண்ணாமலையும் கடைசியாக சென்று வந்துள்ளனர்.

கட்சிகளை தள்ளிவைத்துவிட்டு சமூகம் போராடியது, சமூகமாக போராடியது. இதை பாஜக பயன்படுத்திக் கொண்டது. மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்; அந்த மகிழ்ச்சியில் நாமும் பங்கு கொள்கிறோம். இப்போது தேர்தலை நோக்கி, சமூகத்துக்கு மேலாக பாஜக, திமுக, அதிமுக அரசியல் கட்சிகள் முன்வந்துள்ளன. ஆனால், கார்ப்பரேட் எதிர்ப்பு விவசாயிகள் போராட்டம் தொடர்கிறது. அவிமச, இகக(மாலெ) உள்ளிட்ட இடது, முற்போக்கு ஜனநாயக சக்திகள் எப்போதும் முன்னணியில் இருக்க வேண்டும்; இருக்கும் ●




## திறந்தவெளி கருத்தரங்கம்



**அரசமைப்புச் சட்டம் காப்போம்;
குடியரசைக் காப்போம்;
சமஸ்கிருதம் - இந்தித் திணிப்பை எதிர்ப்போம்;
மொழிப்போர் உரிமையை பாதுகாப்போம்!**

CPIML LIBERATION அரசமைப்புச் சட்டம், குடியரசு 75

# திறந்தவெளி கருத்தரங்கம் 25-01-2025 - நெல்லை

இந்திய விடுதலைப் போரில் அண்ணல் அம்பேத்கர் தலைமையில் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்தையும் குடியரசு மாண்புகளையும் அழிக்கச் சதி செய்யும் ஆர்எஸ்எஸ்- பாஜகவிடமிருந்து அரசமைப்புச் சட்டத்தையும் இந்திய குடியரசையும் காக்கும் கடமை இந்தியாவிலுள்ள ஒவ்வொருக்கும் உடனடி அவசர கடமையாக முன்வந்துள்ளது. இதை மக்களிடம் கொண்டு செல்லும் விதமாக, இகக (மாலெ) நடத்திவரும் 'அரசமைப்புச் சட்டம் காப்போம்! மதச்சார்பற்ற, சோசலிச, ஜனநாயக குடியரசைக் காப்போம்!' அரசியல் பரப்புரை இயக்கத்தின் நிறைவு நிகழ்ச்சியாக, கட்டபொம்மன், பாரதி, வ.உ.சி, வீரன் சுந்தரலிங்கம், பூலித்தேவன், ஒண்டிவீரன் என விடுதலைப் போர் விளைந்த மண்ணாம் நெல்லையில், மொழிப்போர் தியாகிகள் நினைவு நாளான 25-01-2025 மாலை திறந்த வெளி கருத்தரங்கம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் எம்.சுந்தர்ராஜ் தலைமை தாங்கினார்.

மாநிலக் குழு உறுப்பினர் க கணேசன், விடுதலைப் போர், மொழிப்போர் தியாகிகளுக்கு அஞ்சலி தெரிவிக்கும் தீர்மானத்தை முன் மொழிந்தார்.

75 வது குடியரசு நாளான 26-01-2025 அன்று அரசமைப்புச் சட்ட முகப்புரையை வாசித்து உறுதி மொழி ஏற்கும் நிகழ்வை தொடங்கி வைக்கும் விதமாக, கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் சுசீலா, அரசமைப்புச் சட்ட முகப்புரையை வாசித்து தொடங்கி வைத்தார்.

மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, மத்தியக்குழு உறுப்பினர் பாலசுந்தரம், ஏஅய்சிசிடியு மாநிலத் தலைவர் டி.சங்கரபாண்டியன், அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர் ஜி.ரமேஷ், ஏஅய்சிசிடியு கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.எம்.அந்தோணிமுத்து, கட்சியின் தூத்துக்குடி மாவட்டப் பொறுப்பாளர் முருகன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக தேசியக் குழு உறுப்பினர் கார்மல், மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் த.சகாயம் தென்காசி மாவட்டச் செயலாளர் புதியவன் உள்ளிட்டோர் கலந்து கொண்ட கருத்தரங்கத்தில் திரளான பெண்கள், தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்●

## கல்வியின் அடிப்படையையே தகர்க்கிறது யுஜிசி!

தேசியக் கல்விக் கொள்கையினை ஒட்டிப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உதவி பேராசிரியர் நியமனம் மற்றும் துணை வேந்தர் நியமனத்தில் யுஜிசி முக்கிய மாற்றங்கள் கொண்டுவர திட்டமிட்டுள்ளது. துணை வேந்தருக்கானத் தேடுதல் குழுவில் இது வரை பல்கலைக் கழக செனட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஒரு பிரதிநிதியும், ஆட்சிக் குழு எனப்படும் சிண்டிகேட்டிலிருந்து தேர்வு செய்யப்படும் பிரதிநிதி ஒருவரும், மேலும் ஆளுநர் சார்பாக ஒரு பிரதிநிதியும் இருந்தனர். ஆனால் தற்போது செனட் மற்றும் சிண்டிகேட்டில் ஏதேனும் ஒன்றிலிருந்து மட்டும் ஒரு பிரதிநிதி தேர்வு செய்யப்படலாம் என்று மாற்றப்பட உள்ளது. இது ஆசிரியர் பிரதிநிதிகள் செனட்டில் பங்கேற்று தேடுதல் குழுவிற்கான பிரதிநிதியைத் தேர்வு செய்யும் வாய்ப்பை தட்டிப்பறிக்கும். கூடுதலாக யு.ஜி.சியின் பிரதிநிதி ஒருவர் தேடுதல் குழுவில் இடம்பெறுவார் என்பது தொடர்ந்து தமிழ் நாடு அரசும் பல கல்வியாளர்களும் எதிர்த்து வரும் விஷயமாகும். தமிழ் நாட்டில் தகுதி வாய்ந்த ஒரு கல்வியாளரை தீர்மானிப்பதில் யு.ஜி.சி பிரதிநிதியும் இருப்பார், இது தவிர ஆளுநர் பிரதிநிதி ஒருவரும் இருப்பார், எல்லாவற்றிற்கும் மேலாக ஆளுநர் யார் துணைவேந்தராவது என்பதைத் தீர்மானிப்பார் என்பது துணை வேந்தர் நியமனத்தில் மாநில அரசுக்கோ, ஆசிரியர்களுகோ எந்த வகையிலும் பங்காற்ற அதிகாரம் இல்லை என்றாக்குகின்றது. கல்விப் பரப்பில் தங்கள் அரசியல் செல்வாக்கை நிலைநாட்ட நடுவண் அரசு இப்படிப்பட்ட ஜனநாயக விரோதத் திட்டங்களைக் கொண்டுவருவது கண்டனத்துக்குரியது.

உதவி பேராசிரியர் நியமனத்தில், இளங்கலை மற்றும் முதுகலைப் படிப்புகளில் எந்தப் படிப்புகளில் படித்திருந்தாலும், நெட் தேர்ச்சி அல்லது முனைவர் பட்டத்தை பெறும் பாடத்தில் ஆசிரியராக நியமிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இளங்கலை, முதுகலை ஒரு பாடத்திட்டத்தில் படிக்காமலேயே அப்பாடங்களில் நெட் தேர்வு எழுதலாம், முனைவர் ஆராய்ச்சியும் மேற்கொள்ளலாம் என்பதை மறைமுகமாக இது சுட்டுகின்றது. இளங்கலை, முதுகலையில் தான் கற்பிக்கப்போகும் பாடங்களைப் பயிலாதவர் எப்படி அந்தப் பாடங்களை மாணவர்களுக்கு அடிப்படைகளுடன் நடத்த இயலும்?

யு.ஜி.சி. கற்பித்தலின் அடிப்படையையே தகர்க்கிறது. எனவே இந்த முன்வைப்பை யு.ஜி.சி. கண்டிப்பாகத் திரும்பப் பெற வேண்டும்.

*-மேனாள் கல்லூரி முதல்வர் பேரா. இரா.முரளி*



# பல்கலைக் மானியக்குழு வரைவு அறிக்கை: கல்வியாளர்கள் கருத்து

தேசிய கல்விக் கொள்கை 2020 அமலாக்கம் தொடர்பாக பள்ளிக் கல்வி முதல் கல்லூரி, பல்கலைக்கழகக் கல்வி வரை பல திட்டங்களை ஒன்றிய அரசு கடந்த 5 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

மாநில அரசுகள் பள்ளிக்கல்வித் துறையிலும் உயர்கல்வித் துறையிலும் சிலவற்றை அமல்படுத்தும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி உள்ளன.

திறன் மேம்பாடு ( Skill Development) பள்ளி முதல் உயர் கல்வி நிறுவனங்கள் வரை அமலாக்கப்பட்டுவிட்டன.

உயர் கல்வி நிறுவனங்கள் பேராசிரியர்களைத் தங்கள் பாடங்களில் சிலவற்றை நீக்கச் சொல்லியோ, நடத்த வேண்டிய நேரத்தைக் குறைக்கச் சொல்லியோ மதிப்பெண் புள்ளி என்ற பெயரில் பன்னாட்டு நிறுவனங்களின் வழிகாட்டுதலில் திறன் மேம்பாடு வகுப்புகளை நடத்திக் கொண்டிருக்கின்றன.

நீட் தேர்வு, மத்திய அரசு பல்கலைக்கழகங்களுக்கு -எதிர்காலத்தில் மாநிலக் கல்லூரிகளுக்கு மாணவர் சேர கியூட் தேர்வு, போன்ற எல்லா தேர்வுகளையும் நடத்த தேசியத் தேர்வு முகமை (National Testing Agency-NTA) தேசிய கல்விக் கொள்கை 2020ன் பரிந்துரையின் அமலாக்கமே.

மாணவர்கள் பட்டம் படிக்கலாம். நடுவில் விட்டு விட்டு வெளியேறலாம். மீண்டும் படிக்க வரலாம். அவ்வப்போது எடுக்கும் மதிப்பெண்களை சேமித்து வைக்க கல்வி மதிப்பெண் புள்ளி வங்கி (Academic Credit Bank - abc.gov.in) குறித்து விவாதங்கள் நடந்தன. எதிர்த்தோம். எதிர்க்கிறோம். ஆனாலும் நடைமுறைக்கு வந்து விட்டன.

தேசிய கல்விக் கொள்கை 2020 ன் அமலாக்கம் குறித்து சிலவற்றை மாநில அரசாங்கங்கள் எதிர்க்கின்றன, சில அமலாக்கத்தில் ஒரு பகுதியை எதிர்க்கின்றன. “உதய இந்தியாவின் தலைமை அமைச்சர் பள்ளிகள் (PMShri school)” ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கை திட்டங்களில் ஒன்றாகும். தமிழ்நாடு அரசு அந்தப் பள்ளி திட்டத்தின் ஒரு பகுதியான மும்மொழித் திணிப்பை மட்டுமே எதிர்க்கிறது.

இதற்கேற்ப பல கல்வி நிர்வாக அமைப்புகளும், ஆசிரியர்- பேராசிரியர் நியமன விதிகளும் மாற்றப்படுகின்றன.

பல்கலைக்கழக நல்கைக்குழு வெளியிட்டுள்ள வரைவு அறிக்கை, பல்கலைக்கழகத் துணைவேந்தர் நியமனத்தில் மேலும் தன் ஆதிக்கத்தை நிறுவ சில மாற்றங்களை ஒன்றிய அரசு பரிந்துரைக்கிறது. உயர் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் தன்னுடைய சித்தாந்த வலையில் கொண்டு வர பாஜகவின் திட்டங்களில் ஒன்றாகவும் இதனைப் பார்க்க வேண்டும்.

இந்த வரைவு அறிக்கையை நிராகரித்து தமிழ்நாடு அரசு சட்டமன்றம் தீர்மானம் இயற்றியதைத் தொடர்ந்து கேரள சட்டமன்றமும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் விரிவான அறிக்கை வெளியிட்டுள்ளதோடு, சட்டரீதியாகவும் தீர்வு காண்போம் எனக் கூறியுள்ளார்.

சட்டப் போராட்டம் தீர்வு தருமா? என்பது கேள்விக்குறியே.

வரைவு அறிக்கையைக் கடுமையாக எதிர்க்கும் நமது முதலமைச்சர் தேசிய கல்விக் கல்விக் கொள்கையின் ஒட்டுமொத்த அமலாக்கத்தையும் எதிர்க்க வேண்டும்.

மாநில கல்வி உரிமை, மாநில தன்னாட்சி போன்ற கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி மாணவர்கள் இளைஞர்களைத் திரட்டி போராட மாநில கட்சிகளும், இடதுசாரி கட்சிகளும், முற்போக்கு இயக்கங்களும் களமிறங்க வேண்டும்.

***-மேனாள் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ப. சிவகுமார்***

# மக்கள் கல்விக் கூட்டியக்கம் - அறிக்கை

கல்விப் பரப்பில் தங்கள் அரசியல் செல்வாக்கை நிலைநாட்ட நடுவண் அரசு இப்படிப்பட்ட ஜனநாயக விரோதத் திட்டங்களைக் கொண்டுவருவதை மக்கள் கல்விக் கூட்டியக்கம் கண்டிக்கிறது. ஆசிரியர் நியமனத்தில், இளங்கலை,

முதுகலைப் படிப்புகளில் எந்தப் படிப்புகளில் படித்திருந்தாலும், நெட் தேர்ச்சி அல்லது முனைவர் பட்டத்தை பெறும் பாடத்தில் ஆசிரியராக நியமிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இளங்கலை, முதுகலை ஒரு பாடத்திட்டத்தில் படிக்காமலேயே அப்பாடங்களில் நெட் தேர்வு எழுதலாம், முனைவர் ஆராய்ச்சியும் மேற்கொள்ளலாம் என்பதை மறைமுகமாக இது சுட்டுகின்றது. இளங்கலை, முதுகலையில் தான் கற்பிக்கப்போகும் பாடங்களைப் பயிலாதவர் எப்படி அந்தப் பாடங்களை மாணவர்களுக்கு அடிப்படைகளுடன் நடத்த இயலும்? மேலும் முனைவர் பட்டம் என்பது கல்லூரிகளில் பாடம் நடத்துவதற்கு அவசியமானதே அல்ல. அது ஒரு சிறப்பு அம்சம் அவ்வளவுதான். யு.ஜி.சி. கற்பித்தலின் அடிப்படையையே தகர்க்கின்றது. இன்று முனைவர் பட்டம் என்பது ஒரு துறையில் பதிந்து அதை பல துறைகளில் இன்டெர் டிசிபிளினரியாக செய்கின்றனர். அது ஆய்வுக்குத்தான் சரிவரும். பாடங்களை நடத்த அல்ல. எனவே இந்த முன்வைப்பை யு.ஜி.சி. கண்டிப்பாகத் திரும்பப் பெற வேண்டும் என வேண்டுகின்றோம்.

கல்லூரி, பல்கலைக் கழக உதவிப் பேராசிரியர்கள் பணி நியமனத்தில் பல வித பிரிவுகளை யு.ஜி. சி. அறிமுகப்படுத்துகின்றது. உதவிப் பேராசிரியர் பணிக்கு பலவித நிலைகளை குறிப்பிடுகின்றது. அப்படியாயின் ஊதிய நிர்ணயத்திலும் இது பல வேறுபாடுகளைக் குறிக்கும். இது ஆசிரியர்கள் நலனுக்கு விரோதமானது. ஆசிரியர்களைப் பழி வாங்க நிர்வாகங்களுக்கு வழங்கப்படும் சக்தி வாய்ந்த ஆயுதம் இது. ஏற்கனவே உள்ள மூன்று நிலைகளில் பணி உயர்வு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படும் ஆசிரியர்களின் மன உளைச்சல்கள் ஏராளம். இதில் கூடுதலான பல பிரிவுகளை உண்டாக்குவது அவற்றில் ஆசிரியர்களுக்கு பணி உயர்வு கிட்டுமா என்பது சந்தேகமே! இவை பற்றி ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்புகளுடன் உரையாடல் நடத்தி அவர்களின் வழி காட்டுதல்களைப் பெறுவது அவசியம்.

காலிப்பணியிடங்களை ஒரு காலக் கெடுக்குள் தகுதியானவர்களை கொண்டு நிரப்பியே ஆகவேண்டும் என்பதில் யு.ஜி.சி அக்கறையும் காட்டவில்லை என்பதும் வருத்தமளிக்கின்றது.

பேரா. இரா.முரளி. பேரா. வீ அரசு, பேரா.ப.சிவகுமார், கல்வியாளர் கண குறிஞ்சி, ஒருங்கிணைப்பாளர்கள்

# யுஜிசி என்றால் என்ன?

நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களை ஒருங்கிணைக்கவும், அவையளிக்கும் கல்வியைப் படித்தரமாக்கவும்(standardise) 1956 இல் பல்கலைக்கழக நல்கைக் குழுச்(University Grants commission) சட்டம் இயற்றப்பட்டது. பல்கலைக்கழகங்களின் கற்பித்தல், தேர்வு, ஆராய்ச்சியைத் தரப்படுத்தத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் பல்கலை நல்கைக் குழு மேற்கொள்ளும். ஆசிரியர் தகுதியை வரையறுக்கும். கல்விக்காக ஒதுக்கப்படும் நடுவணரசின் நிதியைப் பிரித்தளிக்கும். இந்த வேலைகளை எல்லாம் இப்போதுள்ள நடுவணரசு,மாநில அரசுகள் இயற்றிய சட்டங்களுக்கு உட்பட்டே செய்யமுடியும்.

சுற்றுக்கு அனுப்பப்பட்டுள்ள பல்கலை நல்கைக் குழு வரைவு அறிக்கை, மக்களாட்சிக்கும் பல தேசிய இனங்களின் ஒன்றியமாக உள்ள இந்தியா கூட்டாட்சி (federation) மெய்யியலை ஏற்காமல் ஒற்றை (unitary) ஆட்சி என்ற மக்கள்நாயக மறுப்புக்கு வழி வகுக்கிறது.

புதிய ப ந குழு விதிப்படி அமைக்கப்படும் தேடல் குழுவின் நால்வரில் இருவர் நடுவணரசின் கட்சிக்கு ஆதரவாளர்களாதலால்,பல்கலைக் கழகங்களை உருவாக்கி நிதியளிக்கும் மாநில அரசுகள் ஓரங்கட்டப்படும். இப்படி எல்லாத் துறைகளிலும் கூட்டாண்மை ( கூட்டாட்சி ) நிறுவனங்களுக்கு தனது ஆதரவாளர்களை நிரப்புவது ஆர் எஸ் எஸ் நோக்கமாக உள்ளது.

பிரிட்டிஷார் வரும் முன்பு ஒவ்வொரு சாதிக்குமுரிய முறைசாராக் கல்வியே நடைமுறையில் இருந்தது. யாரும் எதையும் கற்கலாம் என்ற பொதுக் கல்வி குமுகாயத்தில் (சமுதாயத்தில் ) எல்லாருக்கும் சமமாகக் கிடைக்கவில்லை. மெக்காலேயின் திட்டத்தாலும், பின்னர் அம்பேத்கர் தலைமையில் இயற்றப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்தாலும் பொதுமக்கள் சாதி வேறுபாடின்றி கல்வி கற்று, அதிகாரத்தை நோக்கிக் கைநீட்டிக் கேள்வி கேட்கத் தொடங்கியதால் ஆட்டங்கண்ட இந்துத்துவ ஆட்கள்,அதாவது

ஆர் எஸ் எஸ், மீண்டும் கடந்த காலத்துக்குக் குமுகாயத்தைக் (சமுதாயத்தை) கொண்டுசெல்ல முயல்கிறார்கள். நூறாண்டுகளுக்கு மேலாக முஸ்லிம்

ஆட்சியிலும் பிரிட்டிஷ் ஆட்சியிலும் இப்போதும் பார்ப்பனியம் ஆட்சியாளருக்கு நெருக்கமாக ஒட்டிக்கொண்டு தமக்கானவற்றை நிறைவேற்றி வருகிறது. நேரு அமைச்சரவையில் பேராயக் (காங்கிரஸ்) கட்சியில் சேர்ந்தோ தனியாகவோ விடுதலைப் போராட்டத்தில் வேலைசெய்யாத இந்து மகா சபைத் தலைவர் சியாமா பிரசாத் முகர்ஜி அமைச்சரானர். அரசமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்ட புதிய சட்டங்களை ஒதுக்கித் தள்ளிப் பழைய பழக்க வழக்கங்கள் இனியும் செல்லும் என இராசேந்திர பிரசாத் சனாதனத்தை நிலைநாட்டினார். இப்படி இந்துத்துவக் கட்சிகள் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தம் ஆளுகையை ஆர் எஸ் எஸ் தொடர்கிறது. இதன் வெளிப்பாடுதான் பாசக.வின் தேசிய கல்விக் கொள்கையும், கல்லூரி, பல்கலைக்கழக ஊடுருவலும் ஆகும்.

யுஜிசி யின் இந்த நடவடிக்கை நூறாண்டு களுக்கு முன் தோன்றிய ஆர் எஸ் எஸ் வழிகாட்டுதலின்கீழ், சனாதனத்தை, அதாவது அறிவியலுக்குப் புறம்பான வைதிக மெய்யியலையும் பார்ப்பனர் மேலாண்மையையும் நிலை நிறுத்த மேற்கொள்ளப்படும் போர்த்தந்திர(நீண்டகாலத் திட்ட) நடவடிக்கையின் ஒரு பகுதியாகும்.இந்த வரைவு ஒழுங்காற்று விதி இந்திய குமுகாயத்தில்(சமுதாயம்) புரையோடித் தேங்கிப்போன பிணியின் மேல்மட்டக் குறியே ஆகும்.

இந்திரா காந்தி அவசரநிலை அறிவித்த காலத்தில் கல்வி மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது. பெரியண்ணன் ஆகிய நடுவணரசின் அதிகாரத்துக்கு உட்பட்டது. பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் பாடத்திட்டம் யுஜிசி யால் தீர்மானிக்கப்படும் நிலை வந்தது சோதிடம், வேதகாலக் கணிதம் போன்ற அறிவியலற்ற பாடங்களைத் தமிழ்நாட்டிலும் கற்பிக்கும் நிலை வந்தது. வேதகால அறிவியல் இன்றைய கண்டுபிடிப்புகளுக்கு முன்னோடி என்று யுஜிசி செலவில், (அதாவது மாநில மக்களிடம் வரியாகப் பறித்து நடுவணரசு குவித்து வைத்திருக்கும் நிதியில்), கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. நடுவணரசு மறைமுகமாக அமர்த்தும் துணைவேந்தர்கள் பதவியில் அமர்ந்தால் தேசிய இனங்களின் வரலாறு, தன்னுரிமை,பண்பாடு, மொழி ,நிலம் யாவும் பறிக்கப்படும் வகையில் ஒற்றைத் தன்மையைக் கல்வி வலியுறுத்தும்.ஏற்கெனவே கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றவேண்டும்,பல்கலைக் கழக வேந்தர்களாக நடுவணரசின் கங்காணிகளாக அமர்த்தப்படும் ஆளுநர்கள் இருக்காமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்களே இருக்கவேண்டும், பாடத்திட்டங்கள்,

வட்டாரங்களின் பன்மயத்தைக் காப்பதாக (கிட்டத்தட்ட கூபாவின் கல்வியமைப்பைப் போல) அமையவேண்டுமென்ற கோரிக்கைகள் கல்வியாளர்களிடையே வலுப் பெற்று வருகின்றன. இந்துத்துத்துவ-- கூட்டாண்மை (கார்ப்பரேட்) கள்ளக்கூட்டின் முயற்சிகளை அரசியல், மெய்யியல் ரீதியாகப் பரப்புரை செய்து முறியடிப்பது நம் கடமையாகும்.

இது ஒருபுறம் இருக்க, யுஜிசி யின் இந்த ஆணை சட்டப்படி செல்லுமா என்பதைக் காணலாம். இதை நம் முதல்வர் கண்டித்ததுடன் மற்ற மாநில முதல்வர்களும் மாநில அரசுகளின் உரிமையைப் பறிக்கும் நடவடிக்கையை எதிர்க்க முன்வருமாறு கேட்டுக்கொண்டார் .'தி இந்து ' ஆங்கில இதழில் சன. 21 அன்று மக்களவையின் முன்னாள் செயலர் நாயகம் ப்பி டி ட்டி ஆச்சாரியும் சன. 22இல், தமிழ்நாட்டில் கல்வித்துறைச் செயலர் நாயகம், இந்தியக் கடல்சார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உட்படப் பல உயர் பொறுப்புகளை வகித்த அசோக் வரதன் ஷெட்டியும் எழுதிய ஆழமான கட்டுரைகள் வெளிவந்தன.

மேலும் துணைவேந்தர் பதவி ஆசிரியர் பணி இல்லை. நிர்வாகப் பணியே. ஆதலால் அதில் ப ந குழு தலையிட முடியாது என வாதிடப்படுகிறது. எனினும் நீதிமன்றங்களில் இது தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கில் மும்பை நீதி மன்றமும் உச்சநீதிமன்றமும் மாறுபட்ட தீர்ப்புகளை வழங்கியுள்ளன. எனினும் மாநிலங்கள் நடத்தும் பல்கலைக்கழகங்களில் ப ந குழு பரிந்துரைக்கவே முடியும், ஆணையிட முடியாது என்ற மும்பை உயர்நீதிமன்றத் தீர்ப்பே செல்லும் என்று கூறுகிறது.

எனவே நாம் கீழ்க்கண்டவாறு நாம் வலியுறுத்த வேண்டும்

1. *மாநிலப் பல்கலைக் கழகங்களில் ஆளுநர் வேந்தராக இருக்கக்கூடாது. முதல்வரே வேந்தர்.*
2. *பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களைப் பல்கலைக் கழகங்கள் தீர்மானிக்கவேண்டும்.*
3. *துணைவேந்தர்களாகக் கல்வியாளர்கள் மட்டுமே அமர்த்தப்பட வேண்டும். அந்த உரிமை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்கே உண்டு.*

இவற்றைச் சட்டப் போராட்டத்தால் செய்து முடிக்க முடியாவிட்டால் அரசமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்குத் தந்தை பெரியார் நடத்திய போராட்டத்தையும் போல மீண்டும் போராட அணியமாவோம்.

*-பேரா. கோச்சடை*



# சுதந்திரம்; அரசியலமைப்புச் சட்டம் மீதான தாக்குதலுக்கு எதிராக இகக(மாலெ) நடத்திய மூவர்ணக் கொடி அணிவகுப்பு.

இந்திய குடியரசின் 75 வது ஆண்டை முன்னிட்டு, அரசமைப்புச் சட்டம் மீதான, அதன் விழுமியங்களான சுதந்திரம், சமத்துவம்,சமூக நீதி ஆகியவற்றின் மீதான தாக்குதலுக்கு எதிராக மூவர்ணக் கொடி அணிவகுப்புகளை நாடு முழுவதும் இகக(மாலெ) கட்டமைத்தது.

பல்லாயிரக்கணக்கான கட்சி அணிகளும் குடிமக்களும் பங்கேற்ற நிகழ்வுகள் அனைத்திலும் அரசியலமைப்புச் சட்ட முகப்புரை படிக்கப்பட்டு உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது. இரண்டு மாத காலமாக நடந்து வரும் "அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்போம்" இயக்கத்தின் ஒரு பகுதியாக இந்தப் பேரணிகள் நடந்தன. இந்நிகழ்வுகளில் அரசமைப்புச் சட்ட முகப்புரை பொறிக்கப்பட்ட பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன. அரசமைப்புச் சட்டத்தின் கருவான விழுமியங்களை பாதுகாத்து வைத்துக் கொள்வதும்,ஜனநாயகத்தையும் சமூக நீதியையும் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்துவதற்காக இந்த பிரச்சார இயக்கம் நடத்தப்பட்டது.

***பீகார்***

தர்பங்காவில் நடைபெற்ற மூவர்ணக் கொடி அணிவகுப்பில் இ க க (மா லெ) பொதுச்செயலாளர் திபங்கர், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் திரேந்திர ஜா, பீகார் மேலவை உறுப்பினர் சசி யாதவ்,புரட்சிகர இளைஞர் கழகத்தின் பொதுச்செயலாளர் நீரஜ் குமார், ஏகியான் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் தோழர் சிவப்பிரகாஷ் ரஞ்சன், இன்சாப் மஞ்சின் நியாஸ் அகமது, அகில இந்திய மாணவர் கழகத்தின் பிரசன்ஞ் ஜித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசமைப்புச் சட்டம், சுதந்திரம், சமத்துவம் ,சகோதரத்துவம், சோசலிச விழுமியங்களை பாதுகாப்பதை, மறு அர்ப்பணிப்பு செய்வதை நினைவுபடுத்தும் நாளாக குடியரசு தினம் அமைகிறதென்று தோழர் திபங்கர் கூறினார். இப்போதுள்ள அரசாங்கம் மதச்சார்பின்மை மற்றும் சோசலிச கொள்கைகளை அரசமைப்புச் சட்ட முகப்புரையிலிருந்து நீக்க முயற்சிப்பதாக விமர்சித்த அவர், மோடி ஆட்சியானது, அரசமைப்புச் சட்டத்தை கொஞ்சம் கொஞ்சமாக செல்லரித்துப் போகச் செய்வதாக குற்றம் சாட்டினார். இந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஜனநாயகத்தையும் அரசியலமைப்புச் சட்டத்தையும் பாதுகாக்க நாட்டின் இளைஞர்கள் முன் வர வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.பாட்னாவில் கட்சி அலுவலகத்திலும் சட்டமன்ற அலுவலகங்களிலும் மூவர்ணக் கொடியை கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் குணால், மூத்த தலைவர் தோழர் கே டி யாதவ் ஆகியோர் ஏற்றினர். கயா, ஜெகனாபாத், ஆர்வால், பாலிகஞ்ச்,படுகா மாவட்டங்களிலும் முகப்புரை பொறிக்கப்பட்ட பதாகை வைக்கப்பட்டிருந்தன. பக்ஸர், போஜ்பூர், பெகுசராய், நவ்டா, கிழக்குச் சம்பரான்,மேற்குச் சம்பரான் சகரியா, சிவான் மற்றும் சகஸ்ரா மாவட்டங்களில் மூவர்ணக் கொடி அணிவகுப்பு நடத்தப்பட்டது.

கோஷி பகுதியில் உள்ள 37 பள்ளிக்கூடங்களில் இ க க (மா லெ) சட்டமன்ற உறுப்பினர் ராம் பலி சிங் யாதவ் அரசமைப்புச் சட்ட முகப்புரை பொறிக்கப்பட்ட பதாகையை நிறுவினார். ஆர்வாலில் சுதந்தரப் போராட்ட தியாகிகளின் நினைவாக பூங்கா அமைக்கப்படும் என்ற அறிவிப்போடு அங்கு ஒன்றிய அலுவலகத்தில் மிகப்பெரிய முகப்புரை பதாகையை சட்டமன்ற உறுப்பினர் மகானந்த் சிங் திறந்து வைத்தார்.

இ க க (மா லெ) சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திப் சௌரவ், கோபால் ரவி தாஸ், பிரசாத் ரஞ்சன் ஆகியோர் அவரவர் தொகுதிகளில் அரசமைப்புச் சட்ட முகப்புரை பதாகையை நிறுவினர். "அரசமைப்புச் சட்டம் காப்போம்"இயக்கம் மாநிலம் முழுக்க தொடர்ந்து நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.

***உத்திரப்பிரதேசம்***

உத்திரபிரதேசத்தின் பல பகுதிகளிலும் ஜனவரி 26 அன்று மூவர்ணக் கொடி அணிவகுப்பு நடத்தப்பட்டது. லக்னோவில் டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் சிலை அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இ க க (மா லெ) மாநிலச் செயலாளர் தோழர் சுதாகர் யாதவ் பேசினார். நாட்டின் வளங்கள் அனைத்தையும் அதானி, அம்பானிகளுக்கு கொள்ளை அடிக்க கொடுத்துவிட்டு தட்டிக் கேட்கும் எதிர்க்கட்சியினரை துரோகிகள் என முத்திரை குத்தி, கைது செய்து சிறையில் அடைப்பது நடந்து கொண்டிருப்பதாக தனது உரையில் கூறினார். அதேபோல் டாக்டர் அம்பேத்கர் வகுத்தளித்த அரசமைப்பு சட்டத்துக்கு பதிலாக மனுஸ்மிருதியை கொண்டு வர இந்த அரசாங்கம் முயற்சிப்பதாக குற்றம் சாட்டினார். உள்துறை அமைச்சர் அமித் ஷா, அம்பேத்கர் குறித்து இழிவாக பேசியதையும் அவர் கண்டனம் செய்தார்.

அலகாபாத் மாணவர் சங்க மாணவர்கள் ஏற்பாடு செய்த பேரணி சந்திரசேகர ஆசாத் பூங்காவில் நிறைவுற்றது. அரசியலமைப்புச் சட்டம் மீதான தாக்குதலை கண்டித்தும், மதவாதம், முதலாளித்துவம், நிலபிரபுத்துவம்,சாதியம் ஆணாதிக்கம் ஆகியவற்றுக்கு




# காலம் புதிதாய் நிகழ்ந்து கொண்டிருக்கிறது

**மு.அ. அக்பர்**

தோழர் அரிசங்கரின் நாவல் பின் நவீனத்துவ மயக்கங்கள் கலைந்து நிகழ்காலத்தை எழுதுவதில் சிறப்பான முயற்சி. அலைவுற்ற மனதின் மொழியினை மொழிதலில் புதிதான சொல்முறை. ஒரு தனி மனிதனின் மனப்பிறழ்வினை சொல்வது போல் தோன்றினாலும் உண்மையில் அப்படியில்லை. கார்ப்பரேட் உலகம் மனிதனை முழுவதுமாக கையகப்படுத்தும் முயற்சியில், அதன் உற்பத்தி முறையில் மனிதனை ஒரு மலிவான பண்டமாக மாற்றுகிறது. தன்னடையாளம், பண்பாடு, கலையின் மூலம் அதன் பிடியில் இருந்து திமிறியெழ மனித மனம் எத்தனிக்கிறது. இந்த முரண் கோட்பாடுகளின் மோதலாக மேல் எழும்புகிறது. சில காலங்களுக்கு முன் நடந்த ஜல்லிக்கட்டு போராட்டத்தை இதன் அடிப்படையில் புரிந்து கொள்ளலாம்.

தகவல் தொழில்நுட்பத் துறையின் கவர்ச்சிகரமான வாய்ப்புகள், உண்மையில் எந்தத் தன்மையிலானவை. ஒப்பீட்டளவில் கணிசமான சம்பளம், நிச்சயமற்ற பணி நிலைமை, கடினமான உழைப்புச் சுரண்டல், எதையும் திரும்பி பார்க்க முடியாத பதட்டத்தில் உழல வைப்பது, உடலையும், மனதையும் குலைப்பது என்பதாக வெளிப்படுகிறது.

ஒரு கட்டிடத் தொழிலாளிக்கு தன் கூலி, வேலையின் மீது உள்ள குறைந்தபட்ச அதிகாரம் கூட ஒரு கணினி பொறியாளனுக்கு இல்லை என்பதே உண்மை. இந்நாவலில் வெள்ளை மட்டும் அல்ல, கருப்பு, பச்சை, நீலம், சாம்பல், ஆரஞ்சு என அனைவருமே மனம் பிறழ்ந்தவர்கள் தான்.

இந்நிலையில் இருந்து விடுதலை என்பது எப்படி வாய்க்கும் என்பதே ஒவ்வொருவருக்கும் தனித்துவமாய் இருக்கிறது. நிலவும் அமைப்பு வெள்ளையின் முடிவையே நமக்கு முன்வைக்கிறது. ஆனால் நாவல், நாம் என்ன செய்யப் போகின்றோம் என்ற கேள்வியை வீசிப் போகிறது. உண்மைகள் உண்மைகளும் இல்லை, பொய்கள் பொய்களும் இல்லை, கற்பனைகள் கற்பனைகளும் இல்லை அனைத்தும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

மனப்பிறழ்வினை எழுதும் போது கையாண்டிருக்கும் மொழியும், நடையும் நுட்பமான சொல்லாடல்கள் மூலம் வாசிப்பவனை மயக்கத்தில் ஆழ்த்துகின்றது. ஊடாகவே நிகழும் நிஜங்களின் நிர்வாணம் அதிர்ச்சிகரமான வகையில் மயக்கத்தில் இருந்து விழித்துக் கொள்ள வைக்கிறது. கனவுக்குள் ஆழ்ந்து போக மனம் விரும்பினாலும், மெய்யுலகு அதற்கு அனுமதிப்பதில்லை. கோட்பாடு ரீதியாக இதை தீர்க்க வேண்டியுள்ளது.

எழுதுபவன் தீர்வினை முன்வைக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. புதிய வரைவுகளை நோக்கி பயணிப்பதற்கான வெளி இந்நாவலில் திறந்தே கிடக்கிறது. எழுத்தாளன் அதனை அடைக்கவில்லை என்பதே இந்நாவலின் சிறப்பு.

எழுத்தாளர் தோழர் அரிசங்கர் புதுவையை சேர்ந்தவர், இந்நிலப்பரப்பை தொடர்ந்து எழுதி வருபவர். அவரின் எழுத்துக்களில் பாரீஸ், மாகே கஃபே, மாயப்படகு உள்ளிட்ட நாவல்களும், பதிலடி, ஏமாளி, உடல், சத்தங்கள் ஆகிய சிறுகதை தொகுப்புகளும், உறங்கும் அழகிகளின் இல்லம் என்ற மொழிபெயர்ப்பு நூலும் வெளிவந்துள்ளது. நவகாலனிய வாழ்க்கை சூழலில் தனித்து விடப்பட்ட மனிதத்தின் அகம் சார்ந்த பிரச்சனைகளையும், தமிழ் சூழலில் மிக அரிதாகவே பேசப்படும் பாலியல் சார்ந்த விஷயங்களையும் துணிச்சலாக எழுதி வருபவர்.

**பாராட்டுக்கள்!**

**23-012025 அன்று மதுரையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட்), அகில இந்திய விவசாயிகள் மகாசபை நடத்திய டங்ஸ்டன் எதிர்ப்பு பொது விசாரணை நிகழ்வில் தீப்பொறி சிறப்பு நிதியாக ரூ 10,000 வழங்கப்பட்டது. இது நல்ல முன்மாதிரி!**

**-ஆசிரியர்**



# சாதியின் பேரால் இழிவுபடுத்தப்பட்ட தலித் எம்எல்ஏ கோபால் ரவிதாஸ்! பாஜக ஆதரவு சக்திகளை இககமாலெ கண்டிக்கிறது!

ஜனவரி 26, 2025 அன்று, பீகாரின் குர்தாவுல் (ஃபடுஹா) கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பள்ளியின் கட்டிடத்தில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரை பொறிக்கப்பட்ட கற்பலகையின் திறப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விழாவில் கற்பலகையை திறந்து வைக்க வந்திருந்த இககமாலெ எம்எல்ஏ கோபால் ரவிதாஸ் மீது சாதி அடிப்படையிலான தாக்குதல் நடைபெற்றுள்ளது. சாதிய இழிசொற்களை கூறி அவர் தாக்கப்பட்டு, திறப்பு விழா தடுக்கப்பட்டது. நிகழ்ச்சியின் போது உள்ளே புகுந்த குற்றவாளிகள் இந்த கற்பலகையை ஒரு தலித் திறக்க அனுமதிக்க மாட்டோம் எனக்கூறி, தோழர் கோபால் ரவி தாஸ் மீது இழிவான வார்த்தைகளை வாரி இறைத்தனர். இந்தச் சம்பவம் அப்பகுதியில் உள்ள மக்களிடையே பரவலான சீற்றத்தை பற்றவைத்தது.

பாஜக ஆதரவு நிலப்பிரபுத்துவ சக்திகளின் சாதிய ரீதியிலான இந்த தாக்குதலை இககமாலெ மாநிலச் செயலாளர் குனால் கண்டித்துள்ளார். குற்றவாளிகளை உடனடியாக கைது செய்யக் கோரி இககமாலெ வழக்கு பதிவு செய்துள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்த வெட்கக்கேடான செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜனவரி 28 ஃபடுஹாவில் இசோப்பூர் நகரில் இருந்து தானா சவுக் வரை எதிர்ப்பு பேரணி நடந்தது.

மற்றொரு நிகழ்வில் பாஜக - ஆர் எஸ் எஸ் ஆதரவாளர்கள் ஒரு மோட்டார் சைக்கிள் அணிவகுப்பில் மதவெறி வன்முறையை உருவாக்க தேசிய கொடியை தவறாக பயன்படுத்தினர். இந்த நிகழ்வின்போது முஸ்லிம் இளைஞர் ஒருவர் கோழைத்தனமாக கத்தியால் தாக்கப்பட்டார். அதனால் சூழ்நிலை கொந்தளிப்பாக மாறியது.

அரசமைப்புச் சட்டத்திற்கு, சிறுபான்மையினருக்கு எதிரான பாஜகவின் இந்த செயல்களை சுட்டிக்காட்டி, இககமாலெ ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது. “பதவியில் இருக்கும் ஒரு எம்எல்ஏ இது போன்று அவமானப்படுத்தப்படுவது தலித்துக்களையும் சிறுபான்மையினரையும் அடிமைப்படுத்துவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாகவே உள்ளது. இது நாட்டின் மீது மனுதர்ம கருத்தியலை திணிப்பதற்கான முயற்சி எனக் கூறிய குனால், மக்கள் ஒரு போதும் இதனை வெற்றி பெற அனுமதிக்க மாட்டார்கள்” எனவும் கூறினார்.

இந்த நிகழ்வை கண்டித்து, ஜனவரி 29 இல் பாட்னா மாவட்டம் முழுவதும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெறுமென இககமாலெ அறிவித்துள்ளது. அரசமைப்பு சட்டத்திற்கு எதிராக, பாஜகவின் சாதியவாத, மதவெறி செயல்களுக்கு ஒன்றுபட்ட எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக இந்த போராட்டங்கள் இருக்கும்.

ஃபடுஹாவில் நடைபெற்ற எதிர்ப்பு பேரணியில் இககமாலெ வட்டார செயலாளர் குருதேவ் தலைமை தாங்கினார். அதில் கலந்து கொண்டு கோபால் ரவி தாசுக்கு எதிரான தாக்குதலை மகாகத்பந்தனை சேர்ந்த மூத்த தலைவர்கள் கண்டித்தனர். 24 மணி நேரத்திற்குள் குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். நீதியை நிலை நாட்ட முதலமைச்சர் நிதிஷ்குமார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும், மதவெறி வன்முறைக்கு எதிராகவும் இந்தியாவின் பன்மைத்துவத்தை பாதுகாக்கவும்

வெகுமக்கள் இயக்கங்களை அணி திரட்டுவோம் என்ற உறுதிப்பாட்டை இககமாலெ மறுஉறுதி செய்தது.

# மனித உரிமைகள் மீறலை; நீதி நெறிமுறைகளுக்குப் புறம்பான படுகொலைகளை; பஸ்தரை ராணுவமயமாக்குவதை நிறுத்து!



2024இல் சத்திஸ்கரில் 250 மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டதாக அறிக்கைகள் சொல்கின்றன. 2025 ஜனவரியில் மூன்று வாரத்திற்குள் குறைந்தபட்சம் 47 மாவோயிஸ்டுகளைக் கொன்றுள்ளனர். மாவோயிஸ்டுகள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான கால எல்லையாக மார்ச் 2026அய் அமித்ஷா தீர்மானித்திருக்கிறார். இதன் பொருள், பஸ்தரில் பெருமளவிலான பாதுகாப்பு முகாம்கள், இஸ்ரேலிய ஆளில்லா விமானங்கள் உள்ளிட்ட உயர்தரமான போர்ச் சாதனங்களைப் பயன்படுத்துவதும், அரசால் நடத்தப்படும் சற்றும் கடுமை குறையாத நீதி முறைகளுக்குப் புறம்பான வன்முறைகள் என்பதுதான்.

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களில், பெரும்பாலும் சத்திஸ்கர், ஒடிசாவில்(இப்போது ஜார்க்கண்ட் வரை நீட்டித்துள்ளனர்) 2019லிருந்து 290 பாதுகாப்பு முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட 48 பாதுகாப்பு முகாம்களுக்கும் கூடுதலாக, இந்த ஆண்டில் இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களில் கூடுதலாக 88 பாதுகாப்பு முகாம்களை அமைக்க மத்திய பாதுகாப்புப் படையும், காவல்துறையும் இலக்கு வைத்திருக்கின்றன.

(அரசமைப்புச்சட்ட) அய்ந்தாவது அட்டவணைப் பகுதியில், சம்மந்தப்பட்ட கிராமசபையுடன் எந்தக் கலந்தாலோசனையோ, அதன் ஒப்புதலோ இல்லாமல் அமைக்கப்படும் பாதுகாப்பு முகாம்களையும், அவர்களின் காடுகள், நிலங்கள், இதர வளங்களை சட்டவிரோதமாக அபகரிப்பதையும் பழங்குடியினர் எதிர்த்து வருகின்றனர். முறையான பள்ளிகள், சுகாதார வசதிகள், இதர அடிப்படை வசதிகளையும் கோருகின்றனர். மக்களின் இந்த கோரிக்கைகளை, சத்திஸ்கர் அரசாங்கம், கொடூரமான சத்திஸ்கர் சிறப்பு பொது பாதுகாப்புச் சட்டப் பிரிவுகளின் கீழ் எதிர்கொண்டது; 2024 அக்டோபரில், மூல்வாசி பச்சாவோ மன்ச் (பழங்குடியினர் பாதுகாப்பு மேடை) போன்ற மக்கள் உரிமை அமைப்புகளை தடை செய்வதன் மூலம் எதிர்கொண்டது.

நக்சல் இல்லாத பாரதம் என்ற பெயரில், பாஜக அரசாங்கங்கள், பஸ்தர் போன்ற வளங்கள் நிறைந்த பழங்குடியினர் பகுதிகளை முழுமையாக இராணுவமயமாக்கும் கடிவாளமற்ற ஒரு போரை கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றன.

அரசமைப்புச் சட்ட நெறிமுறைகளுக்கு எதிரான இராணுவமயமாக்கம், போர் கொள்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) விடுதலை கண்டிக்கிறது. முற்றிலுமாக அழித்தொழிக்கும் இந்தப் போரை உடனடியாக நிறுத்தவும், பஸ்தரிலும், இதர பழங்குடியினர் பகுதிகளிலுமுள்ள ஒடுக்கப்பட்ட, வறிய பழங்குடியினருக்கு ஒரு ஜனநாயக வெளியை, சுற்றுச்சூழலை உத்தரவாதம் செய்ய வலியுறுத்துமாறு நீதியை விரும்பும் அனைத்து சக்திகளையும் அறைகூவி அழைக்கிறது. பொய்வழக்குகளில் சிறையில் தள்ளப்பட்டுள்ள எல்லா மனித உரிமைச் செயற்பாட்டாளர்களையும், மக்கள் இயக்கங்களின் தலைவர்களையும், அப்பாவி பழங்குடியினரையும் விடுதலை செய்யுமாறு இகக(மாலெ) கோருகிறது.

ஜனவரி 27,2025

இகக(மாலெ) மத்திய குழு அறிக்கையிலிருந்து...




பெண்கள் மீது தொடரும் வன்கொடுமைகளுக்கு முடிவு கட்ட வேண்டும்;

பெண்கள் புழங்கும் அனைத்து இடங்களிலும் பாதுகாப்பு வேண்டும்!

சென்னை, அண்ணா பல்கலைக் கழக மாணவி வன்கொடுமைக்கு, எதிராக, தமிழ்நாடு முழுவதும் அகில இந்திய அளவிலும் கடும் எதிர்ப்புகளும் கண்டனங்களும் எழுந்துள்ளன. பெண்கள் பாதுகாப்பு, சுதந்திரம் தொடர்பான குரல்கள், கோரிக்கைகள் மீண்டும் எழுந்துள்ளன. அரசுக்கு எதிராக உருவாகியுள்ள கோபத்தை எதிர்கொள்ள, பாலியல் வன்கொடுமைக்கு மரணதண்டனை என்ற சட்டத்தை திமுக அரசு கொண்டு வந்துள்ளது.

உலகம் முழுவதும் மரணதண்டனைக்கு எதிராக இயக்கம் வலுப்பெற்று வருகிறது. அதில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. மரணதண்டனை, பாலியல் வன்கொடுமையை ஒழித்துவிடும் என்று கூறுவது மேம்போக்கான அணுகுமுறை. மாறாக ஆணாதிக்க சிந்தனை, பெண் வெறுப்பு, ஜமீன்தார் மனோபாவம், நுகர்வுப் பண்பாடு இவற்றுக்கு எதிரான கடும் யுத்தம் தேவைப்படுகிறது. ‘பெரியார் கைத்தடியை’ ஆகப் பெரிய பரிசாக மதிக்கும் முதலமைச்சர் அந்த கைத்தடியை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். பாலியல் வன்கொடுமைக்கு எதிரான சமூக, அரசியல், பண்பாட்டுச் சூழலை ஏற்படுத்திட அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்கொடுமை இல்லாத மாநிலம் தமிழ்நாடு என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

அண்மையில், பாஜக மேனாள் மக்களவை உறுப்பினர் ரமேஷ் பிதுரி, சாலைக்கு பிரியங்காவின் கன்னத்தை ஒப்பிட்டும் தில்லி அம்ஆத்மி பெண் முதல்வரை இழிவுபடுத்தியும் பேசியுள்ளார். மோடி தலைமையில் பாஜக ஆட்சிக்கு வந்தது முதல் ஆணாதிக்க, பெண்விரோத, பெண் வெறுப்பு சுற்றுச் சூழல் வளர்ந்து வருகிறது. தமிழ்நாட்டிலும் சாதி ஆணவக் கொலைகள், பாலியல் வன்கொடுமைகள் வளர்ந்து வருகின்றன. இதற்கெதிராக பெரியாரின் பெண்விடுதலைக் கருத்துகளை முனைப்பாக அரசும் சமூக அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் முன்னெடுக்க வேண்டும். பாலியல் வன்கொடுமை குற்றங்களுக்கு மரணதண்டனை தீர்வல்ல; பெண்களுக்கு அச்சமற்ற சுதந்திரமே தீர்வு!


திமுக அரசு,

- அண்ணா பல்கலைக் கழக சம்பவத்தில் குற்றவாளிகள் எந்த வகையிலும் தப்பிக்க விடக் கூடாது. பல்கலைக் கழகத்தையும் பொறுப்பாக்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை பயங்கரம், சிறீமதி மர்ம மரணம் உள்ளிட்ட, நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து விசாரித்து குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும்.
- ஈஷா யோகா மய்யத்தின் மீதான வழக்குகள் அனைத்தையும் விசாரித்து குற்றவாளிகள் எவராயினும் கடும் தண்டனை வழங்கிட வேண்டும்.
- வர்மா கமிட்டி பரிந்துரைகளை விரைந்து செயல்படுத்த வேண்டும். அனைத்து நிறுவனங்களிலும் உள்ளக புகார், விசாரணை அமைப்புகளை அடுத்த ஆறு மாதங்களுக்குள் ஏற்படுத்திட வேண்டும்.
- இடதுசாரி, பெண்ணிய அமைப்புகள், கல்வியாளர்கள், பெண்விடுதலை ஆர்வலர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகள் ஆகியோரை உள்ளடக்கிய உயர்நிலைக் குழுவை ஏற்படுத்தி பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும்.
- தமிழ்நாடு மாநி பெண்கள் ஆணையம் அரசு ஆதரவு அமைப்பாக இல்லாமல் சுதந்திரமாக செயல்பட வேண்டும். பெண்கள் பாதுகாப்பு, உரிமைகள் தொடர்பான பிரச்சனைகள் தொடர்பாக பெண்களுக்கு ஆதரவாக துடிப்புடன் செயல்பட வேண்டும்.
- அரசியல் கட்சிகளுக்குள்ளும் அரசு, அரசு சாரா நிறுவனங்கள் அனைத்திலும் பாலின கூருணர்வை ஏற்படுத்திட வேண்டும்; பாலின நீதியை, சமத்துவத்தை ஒரு சமூக அறிவியலாக வளர்க்கும் விதத்தில் பெரியாரின் பெண்சமத்துவ, பெண்விடுதலைக் கருத்துகளை ஒரு சமூக உணர்வாக வளர்க்கும் விதமாக இடைவிடாத கருத்துப் பரப்புரையை அரசு, கல்விநிறுவனங்கள் தொடர்ந்து நடத்திட வேண்டும்.
- ஏடுகளும் தொலைக் காட்சி, சமூக ஊடகங்கள் உள்ளிட்ட இதர ஊடகங்களும் பெண்களையே குற்றவாளியாக்கும்தரமற்ற செய்திகள் வெளியிடுவதை தடுத்து நிறுத்த வேண்டும். அனைத்து ஊடகங்களும் பெண் மதிப்பை, கண்ணியத்தை உயர்த்திப் பிடிக்கும் பாலியல் கூருணர்வை உறுதி செய்ய வேண்டும்.
- பெண் வன்கொடுமை செயல்கள் நடக்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் உரிமங்களை ரத்து செய்ய அரசு தயங்கக் கூடாது.

\- ஆ.ரேவதி, (அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக அறிக்கையிலிருந்து...)

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.02.2025 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# உரத்துப் பேசு; உரக்கப்பாடு!



சிந்திக்கச் சொன்னவர் பெரியார்
தந்தை பெரியார் தந்தை பெரியார்
சொந்த புத்தியைக் கொண்டே எதையும்
சிந்திக்கச் சொன்னவர் பெரியார்
தந்தை பெரியார் தந்தை பெரியார் (சிந்திக்கச்)

முந்தைய காலத்தின் முறைகளையே
முழுவதும் புரிந்து கொள்வதற்கே
சிந்தையை நன்றாய்த் தெளிவாக்கிச்
சீருடன் பகுத்து ஆராய்ந்து (சிந்திக்கச்)

சாதிப் பிரிவினைகள் ஏன்
சாத்திர விதிமுறைகள் ஏன்
ஆதிக்க நடைமுறை ஏன்
அநீதித் தீண்டாமை ஏன்
பாதிக்கப்படுவோர் யார்
பலனடைந்து வாழ்வோர் யார்
ஏது மற்றிருப்போர் யார்
ஏமாற்றிப் பிழைப்பவர் யார்
மோதி உடைத்து முழுதாய் இங்கே
மாற்றம் காண முருகாய் எதையும் (சிந்திக்கச்)

# சிந்திக்கச் சொன்னவர் பெரியார்!

-பாடலாசிரியர்: பெருமாள் முருகன்

-இசையமைத்துப் பாடியவர்:

கர்நாடக இசைக் கலைஞர் டி எம் கிருஷ்ணா

*(வைக்கம் போராட்ட நூற்றாண்டு கொண்டாட்டத்தின் நினைவாக உருவான பாடல்)*

Owned and Published by; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh